விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 264 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 24 செவ்வாய்க்கிழமை (09.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்பை அரசு மற்றும் படையினர் ஏற்க வேண்டும்

## ஐ.நாவில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்



(ஜெனிவா)

உள்நாட்டுப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் உட்பட துஷ்பிரயோகங்கள் முறையாக ஒப்புக்கொள்ளப்பட்டு அரசு மற்றும் பாதுகாப்புப் படையினர் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

# உள்நாட்டுப் பொறிமுறை ஊடாக மாத்திரமே பொறுப்புக்கூறல்

## ஐ.நாவில் அமைச்சர் விஜித ஹேரத்



(ஜெனிவா)

யுத்தத்தின்போது நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமைமீறல்களை விசாரிப்பதற்கு உள்நாட்டுப் பொறிமுறை ஊடாக மாத்திரமே பொறுப்புக்கூறலுக்கு இலங்கை உறுதி பூண்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாற்றத்துக்கான வரலாற்று சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துக

### வோல்கர் டேர்க்

(ஜெனிவா)

மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வரலாற்றுச் சந்தர்ப்பத்தை இலங்கை பெற்றுள்ளது. அதனைச் சரிவரப் பயன்படுத்த 15ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதச் சட்டத்தில் கைதுகளை நிறுத்துக

### இலங்கையிடம் வோல்கர்

(ஜெனிவா)

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் தன்னிச்சையான கைதுகள் நிறுத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடு 15ஆம் பக்கம் பார்க்க

## கூரையிலிருந்து தவறிவீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

### மானிப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் வீட்டுக் கூரையிலிருந்து தவறிவீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் மானிப்பாய் நவாலி வடக்கைச் சேர்ந்த சிவாநாயகம் சுரேஷ் (வயது-43) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

மேற்படி குடும்பஸ்தர் கடந்த 15ஆம் பக்கம் பார்க்க

### - யாழ்.போதனா வைத்தியசாலையில் -

## இறந்தவர்களின் உடல்கள் செம்மணியில் புதைக்கப்பட்டதா?

### அறிக்கை கேட்கிறது குற்றப்புலனாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்திப் பகுதியில் மனித எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டுள்ள நிலையில், செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையால் உயி 15ஆம் பக்கம் பார்க்க

### ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்க

## அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



16ஆம் பக்கம் பார்க்க

## யாழில் பலத்த காற்றுடன் மழை

### 12 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்றிரவு வீசிய பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த 15ஆம் பக்கம் பார்க்க

### சங்குப்பிட்டிப் பகுதியில்

## ஐஸ் போதைப் பொருளுடன் பவுசர் சாரதி கைது

(யாழ்ப்பாணம்)


சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்குபிட்டிப் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை மதியம் மேற்கொண்ட வீதிச் சோதனை நடவடிக்கையின்போது ஐஸ் போதைப் பொருளுடன் எரிபொருள் தாங்கி (பவுசர்) சாரதி ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



## திருமதி ஜெயலலிதா துரைசிங்கம்

வாழ்த்துக்கவி

மகாலட்சுமியின் முகம்கொண்டவரே
மனசெல்லாம் புன்னகை தவழ்பவரே
செயலில் முடிசூடா இளவரசி நீர்
துரைசிங்கத்தை வசீகரித்த பெண்சிங்கம் நீர்
கற்பிப்பதில் மட்டுமல்ல உப அதிபராய்
நிர்வாக வேலையிலும் உயரத்தைத் தொட்டவர் நீர்

தமிழ் தத்தெடுத்த தவப்புதல்வியே
எம் பள்ளியில் தமிழைக் கட்டிக்காத்த
சாதனை மங்கையே
மணிவிழா நன்னாளில் வாழ்க வாழ்க
என வாழ்த்துகின்றோம் உம் பணியை.

சேவை விபரம்

**15.03.1990 - 16.09.2001**
கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்.
(1996-2001 உபஅதிபர்)
**17.09.2001-16.9.2014**
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.
(2004-2014 உபஅதிபர்)
**17.09.2014-06.09.2025**
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.
(21.02.2021 தொடக்கம் உதவி அதிபர்)
**2005 இல் நல்லாசிரியர் விருது.**
**2016 பிரதிபா பிரபா விருது** போன்றவற்றையும் பெற்றுக்கொண்டார்.
**2012.12.20 இல் சாமாதான நீதவானாக** சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.


ஞாயிற்றுக்கிழமை அன்று தனது சேவையை நிறைவு செய்து மணிவிழாவைக் கொண்டாடுகின்ற எமது பாடசாலையின் உதவி அதிபரும் ஆசிரியருமான திருமதி **ஜெயலலிதா துரைசிங்கம்** அவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைவதோடு ஓய்வுக்காலம் சிறப்பாக அமையப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர் - அதிபர், பிரதி அதிபர்கள்,
உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள்.
( ஆசிரியர்கள், ஊழியர்கள் நலன்புரிச் சங்கம்)
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

(C-3830) Congratulations!



# கண்ணீர் அஞ்சலி



எமது மகா வித்தியாலயத்தின்
முன்னைநாள் அதிபரான திருமதி வசந்தமாலா
சிவபாலன் அவர்களின் அன்புக் கணவர்

## குணரத்தினம் சிவபாலன்

(முன்னாள் பொறியியலாளர் - யாழ்.கல்வி வலயம்)

அவர்கள் இயற்கை எய்தியமையினையிட்டு
மகா வித்தியாலய சமூகத்தினர் பெருந்
துயரடைந்துள்ளோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திப்பதோடு குடும்பத்தினருக்கு ஆறுதல்
மொழிகளையும் பகிர்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொழும்புத்துறை இந்து
மகா வித்தியாலயம்

மண்ணில் 24.10.1951
விண்ணில் 05.09.2025
(1533)



# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும்
ஆசிரியை திருமதி சுகிர்தா வசந்தரூபன்
அவர்களின் பாசமிகு தாயார்

## அமரர் விஜயலட்சுமி குணரத்தினம்

அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(5356)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஸ்ரீசேமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை
புத்தூர்.

மண்ணில் 1949.12.27
விண்ணில் 2025.09.08


## மனித...

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக அறிக்கையை நேற்று சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கம் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவையே எதிர்கால குணப்படுத்துதல், நல்லிணக்கம் மற்றும் நிலையான அமைதியை வளர்ப்பதற்கு அவசியமானவை.

தமது இலங்கைப் பயணத்தின் போது மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களின் தொடர்ச்சியான துன்பங்களை தாம் நேரடியாகக் கண்டதாகவும் செம்மணி மனிதப் புதைகுழியில் தமது ஒரு அன்பானவரின் இழப்பை தாங்கிக்கொள்ளாத துக்கத்தில் இருக்கும் ஒரு குடும்பத்தைத் தாம் சந்தித்ததாகக் குறிப்பிட்ட டேர்க், தென் மாகாணத்தில் ஒரு பெண்ணும் 30 ஆண்டுகளுக்குப் பிறகும் தனது கணவரைத் தேடி வருவதாக தம்மிடம் கூறியதாகத் தெரிவித்துள்ளார்.

தண்டனையிலிருந்து விலக்கு என்பது, இரண்டாவது வன்முறை வடிவமாகும்.

இது தீங்கு சுழற்சிகளை நிலை நிறுத்துகிறது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கவனிக்கப்பட வேண்டும்.

அவர்களின் குரல்கள் பொறுப்புக்கூறல், உண்மை, நீதி மற்றும் இழப்பீடு குறித்த அரசாங்கத்தின் கொள்கைகளை வழிநடத்த வேண்டும்.

அத்துடன் உள்நாட்டுப் போரின் போது மனித உரிமை மீறல்கள் உட்பட மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களை முறையாக ஒப்புக்கொள்ள வேண்டும்.

அரசு மற்றும் அதன் பாதுகாப்புப் படைகள் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

அவர்கள் செய்த உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்களின் நீடித்த தாக்கத்தை அங்கீகரிக்க வேண்டும் என வோல்கர் டேர்க் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளைப் போன்ற அரசு சாராத ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டவை தொடர்பிலும் உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இதுவே, பொதுவான நீதி வழங்கப்படுகிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7)


# அலுவலக தளபாடங்கள், வாகனங்கள் விற்பனைக்குண்டு

இடம்- குடும்பநல்வாழ்வு நிலையத்தின் முல்லைத்தீவு காரியாலயம்
முகவரி- தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு.

மேற்படி முகவரியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் தளபாடங்கள், வாகனங்கள் மலிவு விற்பனைக்குண்டு எதிர்வரும்

**10.09.2025 - 17.09.2025**

கிழமை நாட்கள் காலை 8.30-மாலை 4.30 பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:
**021 229 0188**

(C-270)


# பொது மக்களுக்கான அறிவித்தல்

வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஒன்றிணைந்த பங்களிப்பின் கீழ் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் ஊடாக வலிகாமம் கிழக்கு பிரதேசசபையினரால் பெண்நாய்களுக்கான இலவச கருத்தடை சத்திரசிகிச்சை செயற்றிட்டமானது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இச் செயற்றிட்டமானது கீழ்வரும் அட்டவணையிலுள்ளவாறு நடைபெறும். இச் செயற்றிட்டத்தில் பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை சத்திரசிகிச்சையினை மேற்கொண்டு கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| உப அலுவலகம் | இடம்பெறும் நிலையம் | திகதி | உள்ளடங்கப்படும் பிரதேசம் | |
|---|---|---|---|---|
| | | | கி.சே. இல | பிரிவு |
| புத்தூர் | புத்தூர் உப அலுவலகம், புத்தூர் | 10.09.2025 புதன்கிழமை மு.ப 08.30 - பி.ப 04.00 | J/273 | புத்தூர் மேற்கு |
| | | | J/274 | புத்தூர் வடக்கு |
| | | | J/278 | புத்தூர் கிழக்கு |
| | | | J/269 | நீர்வேலி வடக்கு |
| அச்சுவேலி | அச்சுவேலி உப அலுவலகம், அச்சுவேலி | 11.09.2025 வியாழக்கிழமை மு.ப 08.30 - பி.ப 04.00 | J/285 | அச்சுவேலி வடக்கு |
| | | | J/286 | அச்சுவேலி தெற்கு |
| | | | J/287 | அச்சுவேலி மேற்கு |
| உரும்பிராய் | உரும்பிராய் உப அலுவலகம், உரும்பிராய் | 12.09.2025 வெள்ளிக்கிழமை மு.ப 08.30 - பி.ப 12.30 | J/264 | உரும்பிராய் வடக்கு |
| | அண்ணா சனசமூக நிலையம் | 12.09.2025 வெள்ளிக்கிழமை மு.ப 01.30 - பி.ப 04.00 | J/265 | உரும்பிராய் தெற்கு |
| கோப்பாய் | வன்னியசிங்கம் சனசமூக நிலையம் | 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை மு.ப 08.30 - பி.ப 04.00 | J/258 | இருபாலை கிழக்கு |

தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

(C-3831)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி படுகொலை தொடர்பில் புதிய தகவல்களை வெளிப்படுத்துவேன்!

## மனைவியினூடாக மீண்டும் கடிதம் அனுப்பிய சோமரத்ன

**(கொழும்பு)**

**செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் இதுவரையில் வெளிப்படுத்தாத விடயங்களை சகல ஊடகங்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும், நீதித்துறைக்கும் வெளிப்படுத்துமாறு தனது கணவரான சோமரத்ன ராஜபக்ஷ வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக அவ் வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாகக் குறிப்பிட்டு கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மீண்டும் ஒரு கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.**


பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, அப்படுகொலை குறித்தும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்தும் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும், இவ்விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம 10.07.2025 எனும் திகதியிடப்பட்ட கடிதமொன்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பிவைத்திருந்தார்.

கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் தொடர்பில் இதுவரையில் எந்தவொரு பதிலும் கிட்டாததன் காரணமாக, சோமரத்ன ராஜபக்ஷ மீண்டும் தனது மனைவியின் ஊடாக கடந்த வாரம் ஜனாதிபதிக்கு மற்றுமொரு கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை விவகாரத்தில் தனது வகிபாகம், தான் உள்ளடங்கலாக மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏனைய 5 இராணுவத்தினரும் திட்டமிட்டு சிக்க வைக்கப்பட்டமை, இவ்விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வகிபாகம் என்பன உள்ளடங்கலாக சோமரத்ன ராஜபக்ஷவினால் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திலும், முன்னைய வெளிப்படுத்தல்களிலும் குறிப்பிட்டிருந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் இதுவரையில் வெளிப்படுத்தாத விடயங்களை சகல ஊடகங்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும், நீதித்துறைக்கும் வெளிப்படுத்துமாறு தனது கணவரான சோமரத்ன ராஜபக்ஷ வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக அவ்வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி 1996 ஆம் ஆண்டில் வடக்கில் இடம்பெற்ற செம்மணி மனிதப்படுகொலை, வடக்கில் சித்திரவதைக்கூடங்கள் நடத்தப்பட்ட விதம், அவற்றுடன் தொடர்புடைய இராணுவ உயரதிகாரிகள் தொடக்கம் ஜனாதிபதி வரை அவற்றை செயற்படுத்திய சகல அதிகாரிகளினதும் பெயர் விபரங்கள் போன்றவற்றை இந்நாட்டு மக்கள் தெரிந்துகொள்ளக்கூடியவகையில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்விவகாரம் தொடர்பில் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்து விசாரணைகளை முன்னெடுக்குமாறும், சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளையும் சட்டத்தின் முன் நிறுத்துமாறும், பாதிக்கப்பட்ட யாழ் மக்களுக்கான நீதியை நிலைநாட்டுமாறும் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)



# இரத்தினபுரி வனப்பகுதியில் தீ விபத்து



(இரத்தினபுரி)

இரத்தினபுரியில் உள்ள வெலிகெபொல மற்றும் பலாங்கொட பிரதேச செயலகங்களின் எல்லையில் அமைந்துள்ள வனப்பகுதியில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொங்கஸ்தென்ன கிராம அலுவலர் பிரிவில் உள்ள வனப் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான பிரதேசத்திலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் தீயை கட்டுக்குள் கொண்டுவருவதற்காக கபுகல இராணுவ முகாம் மற்றும் வனத்துறை அதிகாரிகளின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர். (நி)


# விவேகானந்த சபை, கொழும்பு.

## முக்கிய அறிவித்தல்

அகில இலங்கை ரீதியில் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற நாவலர் கட்டுரைப் போட்டிக்காக 1600 கட்டுரைகள் கிடைக்கப் பெற்றன. மொத்தப் பரிசுகள்: ரூபா 12 லட்சம். முடிவுகள் **நாளை 10.09.2025 புதன்கிழமை வீரகேசரி பத்திரிகையில்** முழுபக்க இணைப்பாக பரிசு பெறும் 132 மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலையின் பெயர்களுடன் வெளியிடப்படும் என அறியத்தருகின்றோம்.

நன்றி (5580)


# சட்டத்திற்கு அடிபணிந்து வீட்டை விட்டு வெளியேறும் மகிந்த

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை நீக்கும் சட்டமூலம் மீதான உயர் நீதிமன்ற தீர்ப்பை சபாநாயகர் பெற்றுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் இந்தத் தீர்ப்பை இன்று சபாநாயகர் பாராளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளார். அடுத்த வாரத்திற்குள் அரசாங்கம் இந்த சட்டமூலத்தை நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்க சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஓய்வூதியங்களை தவிர, முன்னாள் ஜனாதிபதிகள் அனுபவித்து வந்த பல சலுகைகள் இரத்து செய்யப்படும்.

அரசாங்க வீடுகளில் தங்கியிருக்கும் முன்னாள் ஜனாதிபதிகளை வெளியேற்றுவது இந்த சட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

முன்னாள் ஜனாதிபதிகளில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மட்டுமே தற்போது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீட்டை அனுபவித்து வருகின்றார்.

இந்நிலையில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பிறகு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சட்டத்திற்கு அடிபணிந்து விஜேராமாவில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறுவார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். (நி)

# நிமல் லான்சா பிணையில் விடுதலை

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா , பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நிமல் லான்சாவை தலா இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதுடன், அவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு நடந்த ஒரு சம்பவம் தொடர்பாக கொச்சிடை பொலிஸாரால் சமீபத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

## சந்தைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றுக்கான 2026.01.01 - 2026.12.31 வரையிலான காலப்பகுதிக்குரிய குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2026

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2025.09.09 இல் இருந்து 2025.09.22ஆம் திகதி 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 2025.09.23 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 2025.09.23 காலை 10.00 மணி
04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் விபரம் குறிப்பிட்டு, "தலைவர், கேள்விச்சபை, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி" என்ற முகவரியிட்டு மூலப்பிரதியை அரக்கு முத்திரையிட்டு, கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியினுள்ளே கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரத்தின் இரண்டாவது பிரதியை ஏக காலத்திலேயே "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பதாரி அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் எவராயினும் ஒருவர் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் சட்ட ரீதியான ஆவணத்தை கொண்டு வருவதுடன், அவ் ஆவணத்தின் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரிடமிருந்து பெறப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
06. கேள்வி திறக்கப்படும் நாளன்று ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்வி தொகையில் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திரங்கள் எதுவித முன் அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன், மீளளிக்கத்தக்க கேள்வி வைப்புப் பணமும் சபையால் மீளளிக்கப்படமாட்டாது.
07. கறுப்பு பட்டியலில் பட்டியற்படுத்தப்பட்டவர்களிற்கு கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படுமாயின் அக் கேள்விப்பத்திரம் எதுவித பரிசீலனையும் இன்றி நிராகரிக்கப்படும்.
08. கேள்வி நிபந்தனைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய கேள்விக் கோரிக்கைகளை சமர்ப்பிக்கப்படாதுவிடின் அல்லது கேள்விப்பத்திரத்தில் ஒப்பமிடத்தவறின் எதுவித முன் அறித்தலுமின்றி கேள்விப்பத்திரத்தை நிராகரிப்பதற்கு பிரதேசசபையின் கேள்விச் சபைக்கு பரிபூரண அதிகாரம் உண்டு.
09. கேள்விதாரரோ அல்லது கேள்விதாரரினால் எழுத்து மூலமாக நியமிக்கப்பட்டு, சபையின் முன் அங்கீகாரம் பெற்றுள்ள கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் சமூகமளிக்கலாம்.
10. சந்தையின் மையப்பகுதியிலிருந்து 500 மீற்றர் (1/2 கி.மீ) தூர சுற்று வட்டத்தில் மீன், மரக்கறி, இறைச்சி, பழங்கள் மற்றும் சந்தையில் விற்கப்படும் பொருட்களை விற்பதும் சபையின் இறைச்சிக்கடையின் அமைவிடத்திலிருந்து 500 மீற்றர் சுற்று வட்டத்தில் இறைச்சி விற்பதும் முற்றாகவே தடை செய்யப்பட்டுள்ளது.
11. மரக்கறி சந்தை, மீன் சந்தை ஆகியவற்றை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர் கீழ்வரும் நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன், நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதாக சபையுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடுதல் வேண்டும் அவ்வாறு ஒப்பந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாதவிடத்து கேள்விப்பத்திரம் எதுவித முன்னறிவித்தலுமின்றி இரத்துச்செய்யப்படும்.
    - I. குத்தகைதாரரால் பாவிக்கப்படும் நியமத் தராசு (நிறுத்தற் கருவி) உற்பத்தியாளர்கள் தெளிவாக பார்க்கக் கூடியதாக காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.
    - II. சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறுவை அளவை திணைக்களத்தினால் முத்திரையிடப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யும் ஆவணங்கள் எச்சந்தர்ப்பத்திலும் சபைக்கு சமர்ப்பிக்க தயாராக இருத்தல் வேண்டும்.
    - III. உற்பத்திப் பொருட்கள் நிறுவைப்பகுதியில் வைத்தே உற்பத்தியாளராலேயே தரத்திற்கேற்பவும், விலை கூறி ஏலமிடல் மூலம் விலை தீர்மானிக்கப்படல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் கட்டாயமாக குத்ததகைதாரர் அவ்விடத்தில் பிரசன்னமாய் இருத்தல் வேண்டும். அல்லது குத்தகைதாரரால் எழுத்து மூலமாக கோரிக்கையை முன் வைத்து சபையால் முன் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் பிரசன்னமாக வேண்டும். ஒரே நேரத்தில் இருவரும் பிரசன்னமாய் இருத்தல் ஆகாது.
    - IV. விவசாய உற்பத்திப்பொருட்கள் அனைத்திற்கும் ஏலமிட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் இருந்து 10% சதவீத கழிவுப் பெறுமதி கொண்ட பணத்தினை எந்த தரப்பினரும் அறவிடலாகாது.
    - V. உற்பத்தியாளரிடமிருந்து ஏலமிட்டு பொருட்களை கொள்வனவு செய்யும் வியாபாரிகள் ஏக காலத்தில் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளை முடிவுறுத்திக் கொள்வதை ஒப்பந்ததாரர் உறுதி செய்து கொள்ள வேண்டும், எந்த விதமான விலைக்கழிவுகளையும் அறவிடலாகாது. அதாவது சந்தை குத்தகைதாரர் முன்னிலையில் உற்பத்தியாளர்கள் அல்லது மரக்கறி மொத்த விற்பனையாளர்கள் சில்லறை வியாபாரிகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதுடன் 10% கழிவு பெறுவதை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒப்பந்த தாரர் ஊக்கமளிக்கக்கூடாது.
    - VI. குத்தகையாளரினால் வரி அறவீட்டின் போது, பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட பற்றுச்சீட்டில் பொதுச் சந்தையின் பெயர், திகதி, பொருளின் வகை, பொருளின் நிறை, அறவிடப்படும் வரித்தொகை, மொத்தத் தொகை என்பன குறிக்கப்படல் வேண்டும். சந்தையில் பாவிக்கப்படும் பற்றுச்சீட்டு ஒவ்வொன்றுக்கும் பிரதேசசபையால் வடிவமைக்கப்பட்ட முத்திரை பதித்திருத்தல் வேண்டும். பற்றுச் சீட்டின்றி கொடுக்கல் வாங்கல்கள் செய்தலாகாது.
    - VII. விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக பிரதேசசபையால் ஒதுக்கப்பட்ட இடமொன்றில், குத்தகைதாரரால் உற்பத்தி பொருட்களை ஏலமிடுவதற்கு ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்படல் வேண்டும், ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட இடத்திற்கு விவசாயிகளிடமிருந்து பிரதேச சபைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக வீதவரியை அறவிடுதல் வேண்டும்.
    - VIII. விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு ஏல விலையின் உச்சமாக 4% (சத வீத) வரி மட்டுமே குத்தகை ஒப்பந்ததாரரால் அறவிடப்படலாம்.
    - IX. எமது பிரதேசசபையினால் அனுமதி பெற்ற வியாபாரி வேறு சந்தையில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்களுக்கு பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலும் பிறிதொரு பிரதேசசபையினால் வியாபார உரிமம் பெற்று கொண்டுவரப்படும் விற்பனை பற்றுச்சீட்டிற்கும் குத்தகையாளரினால் வரி அறவிடுதலாகாது. நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்து கொண்டு வந்து விற்கும் பொருட்களுக்கு வரி அறவிடலாம்.
    - X. சந்தைக்கு வருகை தருகின்ற நுகர்வோர்களினதும், பொருட்களை ஏற்றி இறக்குபவர்களினதும் துவிச்சக்கரவண்டிகளையும் மோட்டார் சைக்கிளையும் மோட்டார் வாகனங்களையும் நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவில் இடவசதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன் பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும் குத்தகைதாரரால் இச்சேவைக்காக சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை பற்றுச்சீட்டை வழங்கி அறவிடமுடியும்.
12. இறைச்சிக் கடைகளிற்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் கீழ்வரும் நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
    - I. பிறிதொரு பிரதேசசபையின் குத்தகைதாரராக இருப்பின் இறைச்சிக்கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய ஆவணம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
    - II. இறைச்சிக்கடையை குத்தகைக்கு பெற்றவரே வியாபார செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் சபையின் .குத்தகைதாரர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவர் வியாபார செயற்பாடுகளில் ஈடுபடுவதாக உறுதி செய்யப்படின் குத்தகை ஒப்பந்தம் தன்னியல்பாகவே இரத்தானதாக கருதப்படும்.
    - III. எமது பிரதேசசபையால் நிர்வகிக்கப்படுகின்ற விலங்கறுமனையில் மாடுகள்,ஆடுகள் ஆகியன (விலங்குகள்) வெட்டப்பட வேண்டும்.
    - IV. இறைச்சி வெட்டுவதற்குரிய மாடுகள், ஆடுகள் வெட்டப்பட முன்னர் எம்மால் குறித்துரைக்கப்படும் தொழுவத்தில் 24 மணி நேரம் கட்டிவைக்கப்பட்டு சபையின் கண்காணிப்பில் இருத்தல் வேண்டும் மேலும் எம்மால் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக குத்தகைதாரர் நடந்து கொள்ள வேண்டும்.
    - V. விலங்கறுமனை மற்றும் இறைச்சி விற்பனைக்கு குத்தகைதாரரினால் வேலைக்கு அமர்த்தப்படுவோரின் பெயர்ப்பட்டியல் பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் அவர்கள் தொற்றுநோயற்ற உடல் ஆரோக்கியம் கொண்டவராக உள்ளார் என்பதை சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரால் பரிசோதித்து மருத்துவ சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
    - VI. 2026.01.01 தொடக்கம் 2026.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருப்பினும் 2026.12.31 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு தங்களது பிரிவுக்குரிய உப அலுவலக பொறுப்பதிகாரியிடம் உரியமுறைப்படி இறைச்சிக்கடையை ஒப்படைக்க வேண்டும். இறுதி இரண்டு வார காலப்பகுதிக்குள் எமது தொழில்நுட்பக்குழுவால் இறைச்சிக்கடைக் கடைக்கட்டடம் பார்வையிடப்படும், சேதங்கள் ஏதாவது ஏற்படுத்தப்பட்டிருப்பின் குத்தகை முடிவுறும் காலப்பகுதிக்குள் கணிப்பிடப்பட்ட நட்டத்தொகையை சபைக்கு செலுத்த வேண்டும்.
13. உரிய நிதி ஆண்டின் கேள்விதொகையின் சம மாத தவணைக்கட்டணத்தில் 1/3 பகுதியை முற்பணமாக ஏற்புக் கடிதத்தில் குறிக்கப்படும் திகதிக்கு முன்னர் செலுத்தி உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னரான மாதாந்தங்களுக்குரிய சமதவணைக் கட்டணங்களை அடுத்துவரும் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக செலுத்த வேண்டும் காலதாமதமாக தவணைக்கட்டணங்கள் செலுத்தப்படின் 10% தண்டத்துடன் செலுத்த வேண்டும். முற்பணமாக செலுத்தப்பட்ட தொகையானது செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களின் தவணைக் கட்டணமாக கருதி கணக்கு சீர் செய்யப்படும்.
14. மேற்கூறிய நிபந்தனைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அத்துடன் குத்தகை உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ எச்சந்தர்ப்பத்திலும் குத்தகைதாரர் மீறுவராயின், குத்தகை உடன்படிக்கை வலுவற்றதாக கருதப்படும் என்பதுடன் 1/3 பங்கு முற்பணம் மீளளிக்கப்படமாட்டாது, எனினும் நிலுவைகள் இருப்பின் அனைத்தும் சபைக்கு குத்தகைதாரரினால் செலுத்த வேண்டும் அவ்வாறல்லாத சந்தர்ப்பத்தில் சட்ட நடவடிக்கை மூலமாக அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும்.
15. இந் நிபந்தனைகளுக்கமைவாக தெரிவு செய்யப்பட்ட குத்தகைதாரர் சபையினால் முன்வைக்கப்படும் குத்தகை ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டு அதற்கு கட்டுப்பட்டவராக செயற்பட வேண்டிய பொறுப்புடையவராகின்றார்.
16. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி
சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.01.2026 – 31.12.2026
வரையுள்ள காலப்பகுதிக்கான குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2026.

| தொ. இல | விபரம் | 2026 ஆம் ஆண்டுக்கான ஆகக் குறைந்த கேள்வி தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம்(1%) | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி மரக்கறிச் சந்தை - வாகன பாதுகாப்பு நிலையம் உட்பட(மேடை, அங்காடி நீங்கலாக) | 17,711,750.00 | 177,117.50 | 2,000.00 | |
| 2 | நெல்லியடி மீன் சந்தை | 580,000.00 | 5,800.00 | 1,000.00 | |
| 3 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 667,250.00 | 6,672.50 | 1,000.00 | 1,000.00 |
| 4 | நெல்லியடி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 62,500.00 | 625.00 | 1,000.00 | 1,000.00 |
| 5 | நெல்லியடிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,400,750.00 | 14,007.50 | 1,000.00 | 1,000.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 6 | உடுப்பிட்டி சந்தை | 3,019,500.00 | 30,195.00 | 1,000.00 | |
| 7 | உடுப்பிட்டி சந்தை வாகன பாதுகாப்பு நிலையம் | 523,250.00 | 5,232.50 | 1,000.00 | |
| 8 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 253,000.00 | 2,530.00 | 1,000.00 | 1,000.00 |
| 9 | உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 3,498,000.00 | 34,980.00 | 1,000.00 | 1,000.00 |
| 10 | நவிண்டில் சந்தை | 36,750.00 | 367.50 | 1,000.00 | |
| 11 | நவின்டில் சந்தை கோழிக்கடை | 78,250.00 | 782.50 | 1,000.00 | 1,000.00 |
| 12 | நவிண்டில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,640,000.00 | 26,400.00 | 1,000.00 | 1,000.00 |
| 13 | மண்டான் சந்தை | 60,750.00 | 607.50 | 1,000.00 | |
| 14 | அந்திரான் சந்தை | 153,250.00 | 1,532.50 | 1,000.00 | |
| 15 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 876,250.00 | 8,762.50 | 1,000.00 | 1,000.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 16 | கோயிற் சந்தை (துவிச்சக்கரவண்டி பா.நி.உட்பட) | 660,250.00 | 6,602.50 | 1,000.00 | |
| 17 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 463,750.00 | 4,637.50 | 1,000.00 | 1,000.00 |
| 18 | கோயிற் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 440,000.00 | 4,400.00 | 1,000.00 | 1,000.00 |
| 19 | கோயிற் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 3,862,250.00 | 38,622.50 | 1,000.00 | 1,000.00 |
| 20 | கொட்டடிச்சந்தை | 609,250.00 | 6,092.50 | 1,000.00 | |
| 21 | கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | 232,250.00 | 2,322.50 | 1,000.00 | 1,000.00 |
| 22 | துன்னாலை வடக்கு சந்தை232 | 122,500.00 | 1,225.00 | 1,000.00 | |
| 23 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 66,000.00 | 660.00 | 1,000.00 | 1,000.00 |

தொடர்புக்கான தொலைபேசி இல:
தலைமை அலுவலகம் : 021 226 3271
நெல்லியடி உப அலுவலகம் : 021 226 1234
உடுப்பிட்டி உப அலுவலகம் : 021 226 1336
கட்டைவேலி உப அலுவலகம் : 021 226 1244

கடமை நேரம்
மு.ப. 8.30 - பி.ப. 16.15 வரை

தயாரித்தவர்: ..............................
சரிபார்த்தவர்: ..............................

குமாரசுவாமி சுரேந்திரன்,
தலைவர், கேள்விச்சபை,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

09.09.2025

(C-3832)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைநிறுத்தம் தீவிரப்படுத்தப்படும்

## மின்சார தொழிற்சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு) ..........

**மின்சார சபை ஊழியர்கள் தொடங்கிய சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தில் அரசாங்கம் எந்த கவனமும் செலுத்தவில்லை என்று இலங்கை மின்சார சபையின் சுதந்திர ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இலங்கை மின்சார சபையை நான்கு பகுதிகளாகப் பிரிப்பதற்கு எதிராக சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தொழிற்சங்க போராட்டத்தின் முதல் கட்டம் இந்த மாதம் 15 ஆம் திகதி வரை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இருப்பினும், இது தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து எந்த நேர்மறையான பதிலும் கிடைக்கவில்லை என்றால், சட்டப்படி வேலை செய்யும் போராட்டம் வேலைநிறுத்தமாக தீவிரப்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபையின் சுதந்திர ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரபாத் பிரியந்தா எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி)


## Invitation for Bids 2025/06

## PROVINCIAL DEPARTMENT OF PROBATION & CHILDCARE SERVICES NORTHERN PROVINCE, Jaffna

1. **The Chairman Department Procurement Committee (DPC) on behalf of the Commissioner, Provincial Department of Probation & Child Care Services, Northern Province** invites sealed bids from eligible and qualified bidders for the works and goods listed in the table below. All the projects will be funded via PSDG.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
3. Interested eligible bidders may obtain further information from **Commissioner, Provincial Department of Probation & Childcare Services, Northern Province [ T.P:021-205 7102 / 021 222 4782, Fax:021 205 7103,Email: pccsnp@gmail.com ] from 09.00 Hrs to 15.00 Hrs** and inspect the bidding documents at the address **Commissioner, Provincial Department of Probation & Child Care Services, Northern Province, Meenadchi Amman Temple Road, Pannai, Jaffna.**

   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03 of 1987 for the contract exceed Rs.5 million for the Category-1.** Relevant document to be submitted.
4. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 (works), Section 2 (goods) of the Qualification Information and Section 5 of the Schedule, Bidding data & Contract data" of the Procurement Documents respectively.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address **Commissioner, Provincial Department of Probation & Childcare Services, Northern Province, Meenadchi Amman Temple Road, Pannai, Jaffna from 09.00 Hrs to 15.00 Hrs.** Upon payment of a non-refundable fee as mention below table. The method of payment will be by cash.
6. Bids must be delivered to the address **Chairman, Department Procurement Committee, Provincial Department of Probation & Child Care Services, Northern Province, Meenadchi Amman Temple Road, Pannai, Jaffna** on or before the date mentioned in the Category I & II. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital in the address above.
7. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table below.
8. The pre-bid meeting for the Category I & II will be held on at **15.09.2025 at 10.30 Hrs** at the **Commissioner, Provincial Department of Probation & Childcare Services, Northern Province, Meenadchi Amman Temple Road, Pannai, Jaffna.**

**Category-01**

| 1. | Document Issuing/Purchasing Period | From 2025-09-09 to 2025-09-30 |
|---|---|---|
| 2. | Closing and Opening of Bids | At 10.30 A.M on 2025-10-01 |

| S. No | Bid No. | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) Without VAT | CIDA Grade Required (Highways) | Required Bid Security | | Contract Period | Non-Refundable fee | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount (Rs.) | Validity Period | | | |
| 1. | PSDG/NP/RDD/DOP/JF/2025/02 | Maintenance of Certified School Internal Road | 7.03 | C8 or above | 71,000.00 | 14.01.2026 | 42 days | 12,000.00 | 17.12.2025 |
| 2. | PSDG/NP/RDD/DOP/JF/2025/03 | Fencing Around the Play Ground to Certified School | 18.51 | C7 or above | 186,000.00 | 14.01.2026 | 91 days | 12,000.00 | 17.12.2025 |

**Category-02**

| 1. | Document Issuing/Purchasing Period | From 2025-09-09 to 2025-09-22 |
|---|---|---|
| 2. | Closing and Opening of Bids | At 10.30 A.M on 2025-09-23 |

| S.No | Bid No. | Name of the Work | Non-Refundable fee | Required Bid Security | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|
| | | | | Amount (Rs.) | Validity Period | |
| 1. | NP/30/02/04/PSDG/Office Equipment/2025/03 | Procurement of Office Equipment-2025/03 | 2,500.00 | 100,000.00 | 09.12.2025 | 11.11.2025 |
| 2. | NP/30/02/04/PSDG/Office Furniture/2025/03 | Procurement of Office Furniture-2025/03 | 2,500.00 | 50,000.00 | 09.12.2025 | 11.11.2025 |

(C-3829)

**Chairman, Department Procurement Committee.**
**Provincial Department of Probation & Child Care Services,**
**Northern Province, Meenadchi Amman Temple Road, Pannai, Jaffna** 09.09.2025


# 83 கடவுச்சீட்டுகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

வேறு நபர்களுக்குச் சொந்தமான 83 கடவுச் சீட்டுகளை சட்டவிரோதமாக வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹொரகொல்ல, கணேமுல்ல பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட சோதனையின் பின்னர் சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வத்தளையைச் சேர்ந்த 51 வயதுடைய ஆண் மற்றும் கணேமுல்ல பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய பெண் ஒருவரும் என தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து கணேமுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# மதுபோதையில் சாரத்தியம் ஒரு நாளில் 38 பேர் கைது!

(கொழும்பு)


பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின்படி நாடளாவிய ரீதியில் குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் கடந்த சனிக்கிழமை மேற் கொள்ளப் பட்டுள்ள சோதனை நடவடிக்கைகளின் போது மது போதையில் வாகனம் செலுத்திய 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த நடவடிக்கைகளின் போது 25,829 பேர் பரிசோதிக்கப்பட்டதாகவும் அவர்களில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 38 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் 672 சந்தேக நபர்களும், குற்றச் செயல்களுடன் நேரடியாக அடையாளம் காணப்பட்ட 16 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 171 நபர்களும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 131 பேரும் இதன் போது கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் கவனக் குறைவாக வாகனம் செலுத்திய 09 வழக்குகள் மற்றும் 3,439 பிற போக்குவரத்து குற்றங்களும் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 06.11.1947 | மறைவு 06.09.2025

எமது பாடசாலை
ஆசிரியை திருமதி. ஆனந்தி கேசவன்
அவர்களின் அன்பு மாமனாரான

அமரர்
**கந்தையா நடராசா**
(ஓய்வு பெற்ற மேலதிக காணிப் பதிவாளர் )

அவர்களின் இறைபதம் அடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் இதுவரை

# 937 டெங்கு நோயாளர்கள்

## வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 937 டெங்கு நோயாளர்கள் இனங்காணப் பட்டுள்ளதாக வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் 937 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் பதிவு செய்யப்படவில்லை.

எனினும் யாழ்.மாவட்டத்தில் பருவ மழைக்காலம் ஆரம்பிக்க இருப்பதால் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டியுள்ளது.

பொதுமக்கள் மத்தியில் டெங்கு கட்டுப்பாட்டு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு நிறுவனங்களிலும் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன. யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதி சகல வணக்கத் தலங்களிலும் 15 ஆம் திகதி சகல அரச நிறுவனங்களிலும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் சகல பாடசாலைகளிலும் இந்த டெங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெறும்

இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையிலான மூன்று தினங்களும் விசேட டெங்கு கட்டுப்பாட்டு தினங்களாக பிரகடனப்படுத்தப்படுகின்றன. இந்த காலப்பகுதியில் சகல வீடுகளிலும், வேலைத்தலங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் பொது இடங்களிலும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்கும் சிரமதானப்பணி ஏற்பாடு செய்யப்படவேண்டும். இக்காலப் பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஏற்பாட்டில் மேற்பார்வைக்குழுக்கள் வீடுகளையும் வேலைத்தலங்களையும் கல்வி நிறுவனங்களையும் வர்த்தக நிலையங்களையும் பார்வையிடுவர். இக்குழுக்களில் சுகாதார திணைக்கள, பிரதேச செயலக, உள்ளூராட்சி மன்ற மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவர். எனவே யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரையும் வேண்டுகிறேன் என தெரிவித்தார். (8)

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

### மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை

ஸ்ரீ.பிளஸ்னா எஸ்றி - 180, பி.நிகரிஷா - 169, ர.ரதுஜன் - 157, ச.அனோஜன் - 157, வி.திஷாளி - 155, ஜீ.நிஷா - 151, செ.கவிவிழி - 151, ர.சமஸ்ருதி - 144, ர.நதுசிகா - 143, செ.ஹரிஷான் - 143, ர.திஷாந் - 139, ரொ.சகின்ஷன் - 139, கு.அவனிஸ் - 138, ச.அனிருத் - 135, மு.கர்சினியன் - 132

### கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்

ச.ஜிவேஸ் - 175, கே.பிரநாத் - 169, ச.அட்சனா - 166, த.டேனுசா - 154, ர.கஜலக்ஷி - 151, பா.நிஷதீபன் - 148, வி.ஒளியரசி - 148, லோ.வர்சிகா - 147, பி.பிரவஸ்தினி - 146, ஜெ.மகிஷாந் - 145, சு.தேனுசா - 141, வி.தமிழ்வாணன் - 136, து.சதுஸ்ரிகா - 136, வி.தமிழ்ஒளி - 132

### யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்

ர.ஹரிசரன் - 140, ஜெ.ஜொய்சி - 134, ப.லிஷாந் - 133


### யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்

ம.மதுமிதா-134

### யா/வட இந்து ஆரம்பப் பாடசாலை

நி.சனுரா-164, ஐ.பவித்ரா-162, ஜெ.கானுஜன்-162, ற.மோனீஸ்-159, இ.புராதனி-158, த.தக்சிகா-158, து.பிரகீசன்-157, பொ.விதுர்ஷனா-153, சு.ஜெய்சாம்-152, மு.அஸ்மிதா-150, உ.நந்துஜா-149, செ.அபிசயா-149, ந.ஆதிஷன்-148, சி.யனுஜன்-146, இ.ரித்திகா-145, கி.நிரூஜன்-145, சி.பிரணவி-143, சு.சஞ்சஜ்-141, செ.மகிஷா-140, பா.ஸங்கீர்த்தனி-138, ச.அபிஷாயினி-137, ச.ஹருணி-137, ஜெ.ஜெருஷா-137, ச.யதீசன்-135, கி.அனிசா-134, கா.கம்சவர்த்தனி-133, க.அமிர்தனா-133

# கந்தர்மடத்தில் நூலகம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் பொதுஜன நூலகம் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவினால் திறந்து வைக்கப்பட்டது.

பலாலி வீதி, கந்தர்மடத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தி பொதுமக்கள் தொடர்பு காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கடற்றொழில் மற்றும் கடல்வளங்கள் துறை அமைச்சர் இ.சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.றஜீவன் உள்ளிட்ட அக்கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கட்சி ஆதரவாளர்களால் நூலகத்திற்கு அன்பளிப்பாக நூல்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை தொடர்பான அறிக்கை யாழ் ஊடக அமையத்தினரால் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவிடம் கையளிக்கப்பட்டது. (8-33)

# வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)



யாழ்.வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.


இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும் 4 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், மறுநாள் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கேணித்தீர்த்தத் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (3)

# பண்பாட்டு பெருவிழா

(கரணவாய்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையோடு வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளரும் பண்பாட்டு பேரவைத் தலைவருமான நடராசா திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ்சும் யாழ்ப்பாண சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் சுகுணாலினி விஜயரத்தினமும் கௌரவ விருந்தினர்களாக மூத்த கலைஞர்களான வே. முத்துசாமியும், மு. ஜெகதேவனும் கலந்து கொள்ளவுள்ளனர். (8-60)



அராலி தெற்கு சைவத் தமிழ் இளைஞர் மன்றத்தின் 10 ஆவது ஆண்டு விழா அராலி அகாயக்குளம் விநாயகர் திறந்த வெளியரங்கில் வெகு சிறப்பாக நடைபெற்றது. (படம் கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடுமையாக அமுல்படுத்தப்படும் போக்குவரத்துச் சட்டங்கள்

(கொழும்பு)

**போக்குவரத்துச் சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.**

அதன்படி வாகனங்களை சோதனை செய்வதற்காக நாடு முழுவதும் பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் தனது அதிகாரப்பூர்வ பேஸ்புக் பக்கத்தில் அவர் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

போக்குவரத்து விதிமுறைகளை மீறி பொருத்தப்பட்ட அதிகப்படியான சத்தம் கொண்ட ஒலி அமைப்புகள் மற்றும் பல வண்ண, ஒளிரும் விளக்குகள் பொருத்தப்பட்ட வாகனங்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை இரவு எல்ல-வெல்லவாய வீதியின் 24 ஆவது மைல் கல் அருகே ஒரு சொகுசு ஜீப்புடன் மோதுண்ட நிலையில், பேருந்து ஒன்று வீதியின் ஓர பாதுகாப்புத் தடையை உடைத்து சுமார் 1,000 அடி பள்ளத் தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர், மேலும் 18 பேர் காயமடைந்தனர்.

இந்த துயர விபத்தைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (நி)

# முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு

(கொழும்பு)

நாட்டில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயலாளர் சி.டி. அலஹக்கான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒரு புறத்தில் விலங்குகளுக்கான தீவனங்களின் விலை அதிகரித்து செல்வதாகவும் மறுபுறத்தில் முட்டைக்கான விலை குறைவடைந்து செல்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை தொடர்ந்தால் நாட்டில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விலங்குகளுக்கான உணவு மற்றும் முட்டை விலைக்கு இடையிலான தொடர்பினை அரசாங்கம் ஏற்படுத்த தவறினால் முட்டை உற்பத்தியாளர்கள் முட்டைகளை உற்பத்தி செய்வதனை தவிர்க்கக் கூடும்.

தற்பொழுது முட்டை உற்பத்தியாளர்கள் கடும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முட்டை உற்பத்தியாளர்கள் விற்பனை செய்பவர்கள் மற்றும் நுகர்வோர் ஆகிய தரப்பினருக்கு நியாயம் ஏற்படக்கூடிய வகையிலான முட்டை விலை முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியம் என இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (நி)

## ‘கல்வியில் யாரையும் கைவிடக்கூடாது’

# ஜனாதிபதியின் எண்ணக்கருவில் புலமைப்பரிசில் திட்டம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் அனர்த்தங்களை எதிர்கொள்ளும் இலங்கையர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் திட்டமொன்றை செயற்படுத்த ஜனாதிபதி நிதியம் திட்டமிட்டுள்ளது.

வெளிநாட்டில் பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் இலங்கையர்களுடைய பிள்ளைகளின் கல்வியைப் பாதுகாப்பதற்காக குறித்த திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

“கல்வியில் யாரையும் கைவிடக் கூடாது” என்ற எண்ணக் கருவுக்கமைய ஜனாதிபதி நிதியம்,வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் என்பன இணைந்து குறித்த திட்டத்தை செயற்படுத்த உள்ளன.

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை விரிவுபடுத்துவது குறித்து அமைச்சர் விஜித ஹேரத், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரின் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது குறித்த திட்டம் தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் இலங்கையர்களுடைய பிள்ளைகளின் பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழகக் கல்வியை உறுதிப்படுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

அத்துடன் இது குறித்த வழிகாட்டுதல்கள் எதிர்வரும் தினங்களில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## விமான நிலையத்தில்

# 20 கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப் பொருள்மீட்பு

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அநாதரவாகக் காணப்பட்ட பயணப்பொதியிலிருந்து 20.9 கிலோ கிராம் நிறையுடைய, 20 கோடி ரூபா பெறுமதியான குஷ் ரக போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்திலிருந்து வருகை தந்த பயணி ஒருவரால் இந்த போதைப்பொருள் கொண்டு வரப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கிராண்ட்பாஸ் பகுதியில் வைத்து 53 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# உலமாக்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் சிவல பள்ளி மீலாத் விழாவின் போது யாழ் மாவட்டத்தில் பத்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஜம்மியதுல் உலமா சபைத் தலைவரும் சர்வமதத் தலைவருமான அல்ஹாஜ் மௌலவி A.M.A. அஸீஸ் (காஸிமி) அவர்களுக்கு S.N. Glass நிறுவனத்தின் அனுசரணையுடன் விருதை கலா



பூஷணம் பரீட் இக்பால் வழங்கும் போது எடுத்த படம். அருகில் சிவல பள்ளி மீலாத் விழா கொமிட்டி தலைவர் M.S.Asan அவர்களும் காணப்படுகிறார். அறிவுக் களஞ்சியம் போட்டிக்கான பரிசில்களுக்கான அனுசரணையாளராக Topaz நிறுவனம் உதவியதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். (5382)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : மானிப்பாய் பட்டின உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர் : விஜயகுமார் கைம்பெண் சுபாஜினி**
**ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : T. தியாகராஜா**

**ஆதன இல - 08 வீதி - கம வீதி வட்டாரம் -12**

வட்டாரம் 12, கம வீதி, ஆதன இலக்கம் 08 இல் அமைந்துள்ளதும் உறுதியின் பிரகாரம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று மானிப்பாய் கிழக்கு இறை “தென்னச்சன் கடனும் இத்தாரம் தோட்டமும்” எனும் பெயருள்ள நிலப்பரப்பு 03 குளி 9.89 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா அவர்களால் எழுதப்பட்ட 8663ஆம் இலக்க 10.08.2019 ஆம் திகதிய பிரகடனப்படுத்தல் சாதன உறுதி மூலம் உடுவில் வீதி மானிப்பாயைச் சேர்ந்த கிருஸ்ணசாமி கைம்பெண் இரத்தினம் என்பவரால் இவ் ஆதனத்தின் உரிமையாளர் தானே என வெளிப்படுத்தல் செய்யப்பட்டு பின்னர் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா அவர்களால் எழுதப்பட்ட 8687 ஆம் இலக்க 26.08.2019 ஆம் திகதிய உறுதி மூலம் விஜயகுமார் கைம்பெண் சுபாஜினி என்பவருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் S.பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 1769 ஆம் இலக்க 23.05.2019 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 3.0 குளி 9.89 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு,

வடக்கு - வீதி
கிழக்கு - வீதி
தெற்கு - நடேசு தொருபனுக்கும் டிலானிக்குமுரிய ஆதனம்
மேற்கு -ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை விஜயகுமார் கைம்பெண் சுபாஜினி என்ற பெயரில் சபையின் ஆதன பதிவேடுகளில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(5353)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பதவி விலகினார் ஜப்பான் பிரதமர்



(டோக்கியோ)

ஜப்பான் பிரதமர் ஷிகேரு இஷிபா பதவியில் இருந்து விலகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜப்பான் நாட்டின் பிரதமர் ஷிகெரு இஷிபா லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் சார்பில் பதவி வகிக்கிறார்.

கடந்த ஜூலை மாதத்தில் நடைபெற்ற அந்நாட்டு பாராளுமன்ற தேர்தலில் லிபரல் டெமாக்ரடிக் கட்சி தோல்வி அடைந்தது.

ஆளும் கட்சியான டெமாக்ரடிக் கட்சி பெரும்பான்மையை இழந்தது.


இதனால், பாராளுமன்ற தேர்தலில் ஆளுங்கட்சி தோல்விக்கு ஜப்பான் நாட்டுப் பிரதமர் இஷிபா பொறுப்பேற்க நிர்வாகிகள் வற்புறுத்தியுள்ளனர்.

கட்சி நிர்வாகிகள் வற்புறுத்தலை அடுத்து பிரதமர் பதவியில் இருந்து ஷிகேரு இஷிபா விலகினார்.

ஒக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தில் புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவார் என தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ட்ரோன் தாக்குதல்களால்
### மூடப்பட்ட இஸ்ரேல் விமான நிலையம்



(ஜெருசலேம்)

ஏமனில் செயற்படும் ஹவுதி பயங்கரவாதிகள் குறிவைத்து ட்ரோன்கள் வீசி தாக்குதல் நடத்தியதில் இஸ்ரேல் விமான நிலையம் சேதம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டுக்கு மேல் நடைபெற்று வருகிறது.

இந்த போரில் 64 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தற்போது வரை உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கு ஏமனில் செயற்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர் ஆதரவு அளித்து வருகின்றனர்.

இந்த ட்ரோன்களை இஸ்ரேல் வான் பாதுகாப்பு அமைப்பு நடுவானில் சுட்டு வீழ்த்தியுள்ளன.

இருப்பினும், ஒரு ட்ரோன் விமான நிலையம் மீது விழுந்து வெடித்தது. இந்த சம்பவத்தில் 63 வயதான நபர் காயமடைந்துள்ளார். இதையடுத்து, விமான நிலையம் உடனடியாக மூடப்பட்டது.

இதனால், விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (நி)

## கரீபியன் கடலில் போ
## வெனிசுலாவைக் குறிவைக்



அதிநவீன போர்க் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் F35 போர் விமானங்களை வெனிசுலாவை நோக்கி அமெரிக்க இராணுவம் நகர்த்தி வருவதாக தகவல்கள் வெளியான வண்ணம் உள்ளன.

இதனால் வெனிசுலா எந்த நேரத்திலும் தாக்கப்படலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வெனிசுலாவிலிருந்து போதைப்பொருள் கும்பல்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதாகவும், இந்த இராணுவ நடவடிக்கை அவற்றை அடக்குவதாகவும் ட்ரம்ப் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு இந்த போதைப்பொருள் மாஃபியாவுடன் நேரடி தொடர்பு இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனாலட் ட்ரம்ப் தொடர்ந்து கூறிவருகிறார்.

அதுமட்டுமல்லாமல், மதுரோவின் இருப்பிடம் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு 50 மில்லியன் டொலர் வெகுமதியையும் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

மேலும், "மதுரோ அரசாங்கத்தின் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன" என்று ட்ரம்ப் சமீபத்தில் சமூக ஊடகங்களில் நேரடியாக எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

(வோஷி
உலகின்
இருப்புகளை
லாவைக் கு
தனது இரா
அளவில் நக

## உக்ரைன் போர் குறித்து வி
### ஐரோப்பிய தலைவர்கள் அமெரிக்க

(வோஷிங்டன்)

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வழிகள் குறித்து விவாதிக்க ஐரோப்பிய தலைவர்கள் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை அமெரிக்காவிற்கு வருகை தருவார்கள் என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனும் "விரைவில் பேசுவேன்" என்றும், மொஸ்கோ மீது இரண்டாம் கட்டத் தடைகளை விதிக்க தனது நிர்வாகம் தயாராக இருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மேலும் ஐரோப்பிய நாடுகள் ரஷ்ய எரிசக்தியை வாங்குவதை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் மீது இரண்டாம் நிலை வரிகளை விதிக்கும் ட்ரம்பின் திட்டங்களையும் ஜெலென்ஸ்கி வரவேற்றார்.

உக்ரைன் மீதான முழு அளவிலான படையெடுப்பு 2022 மார்ச் மாதம் தொடங்கியதிலிருந்து ரஷ்யா சுமார் $985 பில்லியன் (£729 பில்லியன்) எண்ணெய் மற்றும் எரிவாயுவை விற்றுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிகப்பெரிய கொள்முதல் நாடுகள் சீனாவும் இந்தியாவும் ஆகும்.

ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்ய எரிசக்தி கொள்முதலை வியத்தகு முறையில் குறைத்துள்ளது ஆனால் முழுமையாக நிறுத்தப்படவில்லை.


ஜூன் மாதத்தில், 2027 ஆம் ஆண்டுக்குள் பிரஸ்ஸல்ஸ் அனைத்து கொள்முதலையும் நிறுத்துவதற்கான திட்டங்களை வகுத்தது.

கடந்த மாதம், ரஷ்ய எண்ணெயை தொடர்ந்து வாங்குவதற்கான பதிலடியாக, இந்தியாவிலிருந்து வரும் பொருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## போர் மேகம்! ...க்கும் அமெரிக்கா!



...ிங்டன்)

...ன் மிகப்பெரிய எண்ணெய் ...ளைக் கொண்ட வெனிசு... ...குறிவைத்து அமெரிக்கா ...ணுவப் படைகளை பெரிய ...நகர்த்தி வருகிறது.

## உக்ரைன் மீது ரஷ்யா உக்கிரத் தாக்குதல்!



தாக்குதலுக்குள்ளான உக்ரைன் அமைச்சரவை

(கீவ்)

உக்ரைனின் தலைநகர் கீவ் மீது ரஷ்யா ஒரே இரவில் 805 ட்ரோன்கள் மற்றும் 13 ஏவுகணைகளை கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல் உக்ரைனின் அமைச்சரவை கட்டடத்தின் மீது நடத்தப்பட்டதும், கூரை தீப்பிடித்து எரிவதையும் பார்த்ததாக நிருபர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும், கீவ்வில் உள்ள பல உயரமான கட்டடங்களையும் ட்ரோன் தாக்குதல்கள் சேதப்படுத்தின.

தலைநகர் கீவ்வின் மையப்பகுதியில் உள்ள ஒரு பரந்த அரசாங்க வளாகமான உக்ரைனின் அமைச்சரவையின் மீது நடத்தப்பட்ட போரின் முதல் தாக்குதல் இதுவாகும்.

பிரதமர் யூலியா ஸ்வைரிடென்கோ தாக்குதல் குறித்த தனது பதிவில், "எதிரியின் தாக்குதலால் கூரை மற்றும் மேல் தளாங்கள் சேதமடைந்தன. மீட்புப் பணியாளர்கள் தீயை அணைத்து வருகின்றனர். கட்டடங்களை மீட்டெடுப்போம். ஆனால் இழந்த உயிர்களை மீண்டும் கொண்டுவர முடியாது. எதிரி நாடு முழுவதும் ஒவ்வொரு நாளும் நம் மக்களை பயமுறுத்தி கொல்கிறார்" என தெரிவித்தார். (நி)

## முதல் கத்தோலிக்க புனிதராக கார்லோ அகுடிஸ் அறிவிப்பு

(வத்திக்கான்)

2006ஆம் ஆண்டு லியுகுமியாவால் உயிரிழந்த 15 வயது இத்தாலிய சிறுவன் கார்லோ அகுடிஸ் நவீன மில்லினியத்தின் முதல் கத்தோலிக்க புனிதராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

அகுடிஸ் தனது நம்பிக்கையை மேம்படுத்துவதற்காக இணையதளங்களை உருவாக்கி, இளம் கத்தோலிக்கர்களை ஈர்த்து, கடவுளின் செல்வாக்கு செலுத்துபவர் என்று அறியப்பட்டார்.

இந்த நிலையில் புனித பீட்டர் சதுக்கத்தில் 70,000 வழிபாட்டாளர்கள் முன்னிலையில், போப் லியோ XIV, கார்லோ அகுடிஸை நவீன மில்லினியத்தின் முதல் கத்தோலிக்க புனிதராக அறிவித்துள்ளார். (நி)



## ...விவாதிக்க ...கா விஜயம்

...களுக்கு அமெரிக்கா 50% வரிகளை விதித்தது.

எனினும் இந்திய அரசாங்கம், தனது மக்களின் பொருளாதார நலன்களுக்காக எண்ணெய் வாங்குவதில் "சிறந்த ஒப்பந்தத்தை" தொடர்ந்து பின்பற்றுவதாகக் கூறியுள்ளது.

கடந்த வாரம் பீஜிங்கில் நடந்த ஒரு கூட்டத்தில் சீனாவிற்கு எரிவாயு விநியோகத்தை அதிகரிப்பதாக ரஷ்யா கூறியது.

இதனிடையே, கடந்த மாதம் அலாஸ்காவில் ட்ரம்ப் மற்றும் புடின் உச்சி மாநாடு நடத்தியதிலிருந்து ரஷ்யா உக்ரேன் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)



## புற்றுநோய்த் தடுப்பூசி விரைவில் பயன்பாட்டுக்கு

### பரிசோதனையில் வெற்றியீட்டிய ரஷ்யா

(மொஸ்கோ)

உலகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்களை பாதித்து வரும் புற்றுநோயைக் குணப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட தடுப்பூசி விரைவில் பயன்பாட்டுக்கு வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

புற்றுநோயைக் குணப்படுத்துவதற்காக "என்ட்ரோமிக்ஸ்" என்ற புற்றுநோய் தடுப்பூசியை ரஷ்ய நாட்டு மருத்துவ மற்றும் உயிரியல் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

MRNA அடிப்படையிலான இந்த தடுப்பூசி அனைத்துவித பரிசோதனைகளிலும் வெற்றிபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"என்ட்ரோமிக்ஸ்"தடுப்பூசி புற்றுநோய் கட்டிகளை வெற்றிகரமாக அழித்துள்ளது. இந்தத் தடுப்பூசி ஏற்கனவே ரஷ்யாவில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட புற்றுநோயியல் மையங்களில் ஆரம்பகட்ட மருத்துவப் பயன்பாட்டில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசிக்கு பயன்படுத்தப்பட்ட அதே எம்.ஆர்.என்.ஏ நுட்பமே இந்த தடுப்பூசிக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்ததும், இந்த தடுப்பூசி பொதுப் பயன்பாட்டுக்கு விடப்படும் என்று ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஒவ்வொரு நோயாளிக்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட அடுத்த தலைமுறை நோயெதிர்ப்பு சிகிச்சையாக இது இருக்கும் எனவும், கீமோதெரபி அல்லது கதிர் வீச்சு சிகிச்சையைப் போல அல்லாமல் ஆரோக்கியமான திசுக்களை சேதப்படுத்தாமல், புற்றுநோய் செல்களை துல்லியமாக குறிவைத்து அழிக்கும் திறன் கொண்டதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஒட்டுமொத்த உலகையும் புரட்டிப்போட்டுக் கொண்டிருக்கும் புற்றுநோய்க்கு எதிராக இதுவரையில் எந்தவொரு தடுப்பூசியும் கண்டுபிடிக்கப்படவில்லை.

முதன்முறையாக புற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசியைக் கண்டுபிடித்து அதனைப் பரிசோதனை செய்து வெற்றிகரமாக்கியுள்ளது ரஷ்யா.

இந்த நிலையில் எதிர் வரும் காலங்களில் புற்றுநோயால் பாதிக்கப்படுவர்களுக்கு குறித்த தடுப்பூசி ஊடாக சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையை ரஷ்யா முன்வைத்துள்ளது. (நி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டுதோறும்
# 180 பில்லியன் பெறுமதியான மரக்கறிகள், பழங்கள் வீண்விரயம்

(கொழும்பு)

நாட்டில் ஆண்டுதோறும் அறுவடை மற்றும் விற்பனைகளுக்கு பின்னர் ரூ.180 பில்லியன் பெறுமதியளவிலான பழங்களும் காய்கறிகளும் வீண்விரயம் செய்யப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



இவ்வாறு வீண்விரயம் செய்யப்படுகின்ற பழங்கள் மற்றும் காய்கறிகள் நாட்டில் வாழும் மக்களுக்கு இரண்டு முதல் நான்கு மாதங்களுக்கு உணவளிக்க போதுமானது எனத் தெரிவிக்கப்படுகின்றன.

போக்குவரத்தின் போது மாத்திரம் ஆண்டுதோறும் 500,000 மெட்ரிக் தொன்களுக்கும் அதிகமான பழங்கள் மற்றும் காய்கறிகள் வீண்விரயமாகின்றன.

மேலும் அறுவடைகளின் போதும் சுமார் 30 சதவீதம் தொடக்கம் 40 சதவீத வரையிலான பழங்கள் மற்றும் காய்கறிகள் வீண்விரயமாகின்றன.

இதன் காரணமாக விவசாயிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் பாரியளவில் விளைவுகளை சந்திக்கின்றனர்.

இருப்பினும், விவசாயிகள், இடைத்தரகர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் நடவடிக்கைகளைப் பின்பற்றத் தவறுவதாலேயே பழங்கள் மற்றும் காய்கறிகள் வீண்விரயமாக்கப்படுகின்றன.

மேலும், விவசாயிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றினால் 5.7 சதவீதமான பழங்கள் மற்றும் காய்கறிகள் வீணாகுவதை தடுக்கலாம் எனத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1988- இந்து
நட்சத்திரம்: அனுசம்
8இல்செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Sales manager (swiss)
எதிர்பார்ப்பு: Swiss, German
தொ.இ: B/15653

பிறப்பு:1991-RC
நட்சத்திரம்:ஆயிலியம்
1இல்செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்- A/L, Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15656

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:ரேவதி
உயரம்:5'7"
தகைமை/தொழில்: BSC,Teachnician
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/15658

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்:விசாகம்
உயரம்:5'8"
தகைமை/தொழில்-HNDE, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/15659

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
5இல்சூரி செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: Dip in Banking Finance,Assistant Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15660

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1992-இந்து
நட்சத்திரம்: மகம்
7இல் செவ்
கி-பா-66
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc, Civil Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி,IT field
தொ.இ: G/15699

பிறப்பு-1992-இந்து
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Bsc, MBA, Engineer
எதிர்பார்ப்பு:பட்டதாரி
தொ.இ: G/12171

பிறப்பு-1987-இந்து
நட்சத்திரம்: அனுசம்
1இல்செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Fine Arts, DO
எதிர்பார்ப்பு: வெளிநாடு. விவாகரத்தானவர்
தொ.இ: G/15521

பிறப்பு-1991 - இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L, London
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/15272

பிறப்பு-1991 - இந்து
நட்சத்திரம-மகம்
கி.பா-27
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: DO
எதிர்பார்ப்பு - Degree and Employee
தொ.இ: G/15278

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 438



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நமது நிழல்!

ஒரு நபர் இருந்தான். கொஞ்சம் வசதியான நபர்தான் அவனுக்குத் தாராள மனது. அடுத்தவர்களுக்கு அப்பப்ப தன்னாலே முடிந்த உதவி ஏதாவது செய்வான். ஆனால் அவனுடைய மனைவிக்கு அதற்கு நேர்மாறான குணம்! மகா கருமி! அது மட்டுமில்லை. தன்னுடைய கணவனையும் ஏழைகளுக்கு உதவ அனுமதிப்பதில்லை!

அந்த நபர் மற்றவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தால்கூட தன்னுடைய மனைவிக்குத் தெரியாமல் செய்தால்தான் உண்டு! என்ன செய்வது? இப்படி ஒரு கணவன் மனைவி! ஒரு சமயம் அந்த அம்மா பிறந்த வீட்டுக்குப் போக வேண்டியிருந்தது. நடந்தே போகலாம் என்று சொல்லிவிட்டார் அந்த அம்மா. அது கடுமையான கோடைகாலம் சரியான வெயில்!

அந்த உச்சி வெயிலிலே இரண்டு பேரும் நடந்தே புறப்பட்டார்கள். அந்த அம்மா, காலிலே செருப்புகூட மாட்டிக்கவில்லை வெறும் காலோடு நடக்க ஆரம்பித்துவிட்டார்கள். செருப்பு போட்டுக்கொண்டால் அது வேறு தேய்ந்து போய்விடுமில்லையா? அதனாலே..! பக்கத்திலே நிழல் தரக்கூடிய மரம் எதுவும் இல்லை காலிலே சூடு தாங்கமுடியவில்லை! கடுமையான வெப்பம்! "பொடி சுடுதே, என்ன செய்வது" என்றார்கள் அந்த அம்மா. மனைவி தவிப்பதைப் பார்த்தான் கணவன்.

"ஏன் இப்படி தவிக்கிறாய். உனக்குத்தான் உடம்பு ரொம்பப் பெரிதாச்சே. உன் உடம்புடைய நிழல் பூமியிலே விழும். அந்த நிழல் மேலே கொஞ்ச நேரம் நின்று உன்னுடைய கால் சூட்டைத் தவிர்க்கலாமே." என்று யோசனை சொன்னான்.

அந்த அம்மாவுக்குக் கோபம் வந்து விட்டது... "என்ன உளருகிறீர்கள்? என்னுடைய நிழல் மேலே நானே எப்படி நிற்க முடியும்?" என்றார். இப்போது அந்த கணவன் சொன்னானாம்.

"இப்போது கொஞ்சம் சிந்தித்துப் பார். உன்னுடைய நிழலே உனக்கு உதவமுடியவில்லை. நீ பெட்டியிலே பூட்டி வைத்திருக்கின்ற பணமா உனக்கு பிற்காலத்திலே உதவப்போகிறது...?" என்றான். அந்தத் அம்மாவுக்கு புத்தியிலே ஒரு தெளிவு உண்டாக்கியது! மகான்களுக்கெல்லாம் மரத்து நிழலிலே ஞானம் வருது. இந்த அம்மாவுக்கு உச்சி வெயிலிலே ஞானம் வந்திருக்கிறது! வாரியார் சுவாமிகளிடம் கேட்ட கதை இது. இதைக் கேட்டதும் நமக்கு இன்னொரு கதை ஞாபகத்திற்கு வந்தது.

ஒரு பெரிய செல்வந்தன். நிறைய சொத்து. அவன் பயங்கர கருமி. பணம் சேர்க்கத் தெரியுமே தவிர செலவு செய்யத தெரியாது! அவனுக்கு மூன்று பிள்ளைகள்! அந்த மூன்று பேரும் தன்னைப் போலவே கருமியாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான்!

அவனுக்குக் கடைசிக் காலம் நெருங்கிவிட்டது. சாகக் கிடக்கிறான். மூத்த பிள்ளையைக் கூப்பிட்டான். "நான் செத்துப் போனால் என்னை நீ எப்படி அடக்கம் செய்வாய்?" என்று கேட்டான். "உங்களுக்கு சந்தனப் பலகையாலே ஒரு பெட்டி செய்வேன். அதிலே உங்களை வைத்து பட்டுத்துணியாலே மூடுவேன். கௌரவமாக கொண்டு போய் அடக்கம் செய்வேன்!" என்றான். அவர் பளார் என்று அறைந்துவிட்டார் அவனை. "என்னோட பிள்ளையாடா நீ.. சந்தன மரமும் பட்டுத் துணியும் எவ்வளவு செலவாகும். ஊதாரியாக போய் விடுவாய் போல இருக்கே!" என்றான்.

இரண்டாவது பிள்ளையைக் கூப்பிட்டு அதே கேள்வியைக் கேட்டான். அண்ணன் அறை வாங்கினதைப் பார்த்துவிட்டான். அதனாலே ஜாக்கிரதையா பதில் சொன்னான் "நான் உங்களுக்கு கள்ளிப் பலகையாலே தான் அப்பா பெட்டி செய்வேன். துணி எதுவும் போர்த்த மாட்டேன். கொண்டுபோய் அடக்கம் செய்துவிடுவேன்!" என்றான். அவனையும் பளார் என்று அறைந்து விட்டான். "கள்ளிப்பலகை மட்டும் என்ன சும்மாவா கிடைக்கும்...!" காசு கொடுத்தாத்தானே கிடைக்கும்! என்றான்.

கடைசியாக மூன்றாவது மகனைக் கூப்பிட்டான். நீ எப்படிபா என்னை அடக்கம் செய்வாய்? என்றான்.

"நான் உனக்காக செலவே செய்யமாட்டேன். உன்னை வைத்து பிழைத்துக் கொள்வேன்!" என்றான்! "எப்படி பா" என்று கேட்டான்.

"உன்னை துண்டு துண்டாக வெட்டி ஒரு கூடையிலே கொட்டி தலையிலே தூக்கிக்கிட்டு தெருத்தெருவா போவேன். ஆட்டுக்கறி என்று சொல்லி வித்து காசாக்கி விடுவேன்!" என்றான். "நீ தாண்டா என் பிள்ளை! அப்படியே வித்து காசாக்கி விடு. ஆனால். அந்த மேலத்தெருப் பக்கம் மட்டும் போகாதே!" என்றான்.

"ஏம்பா?" என்று கேட்டான் பிள்ளை! "அங்கே இருக்கிறவன் பூறா கடனுக்குத்தான் கேட்பான். கையிலே காசு தரமாட்டான்!" என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள்குடியேற்றத்திற்கு நடவடிக்கை எடுங்கள்

# ஏ.சி.பாம் கிராம மக்கள் கோரிக்கை

(கண்டாவளை) ..............................

**பூர்வீக வாழ்விடத்தில் தங்களை மீள்குடி யேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஏசி.பாம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



முல்லைத்தீவு ஒட்டுசுட் டான் பிரதேசசெயலர் பிரி விற்குட்பட்ட தண்டுவான் கிரா மத்திற்கு அண்மையிலுள்ள ஏ.சி பாம் என்னும் பூர்வீகத் தமிழ் கிராமத்திலுள்ள மக்கள் இடம்பெயர்ந்து 28 ஆண்டு களாகியுள்ள போதும் இது வரையில் மீள் குடியேற்றம் செய்யப்பட வில்லை.

கடந்த 1997ஆம் ஆண்டு அப் பகுதியில் பூர் வீகமாக வாழ் ந்த சுமார் 46 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் குடும்பங்கள் யுத்தம் காரண மாக தமது வாழிடங்களிலிருந்து இடம் பெயர்ந்தனர்.

இந்நிலையில் தற்போது வரையில் குறித்த ஏ.சிபாம் கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் மீள்குடியேற்றம் செய் யப்படவில்லை.

இருப்பினும் குறித்த கிரா மத்தில் மக்கள் வாழ்ந்தமைக் கான அடையாளங்கள் காணப் படுகின்றன. அந்தவகையில் சிதைவடைந்த நிலையில் மக் கள் வாழ்ந்த வீடுகள் காணப் படுவதுடன், வேலிகளுக்காக நடப்பட்ட சீமைக்கிளுவை மரங் களும், மாமரம், தோடை உள்ளிட்ட பலன்தரு மரங்கள் பலவும் தற்போதும் காணப்படு கின்றன.

இத்தகைய சூழலில் கடந்த 2012ஆம் ஆண்டு குறித்த ஏ.சி பாம் கிராமம் தண்டுவான் ஒதுக்கக்காட்டுப்பகுதியாக வர்த் தமானிமூலம் அறிவிக்கப்பட் டுள்ளதுடன், வனவளத் திணைக்களம் குறித்த பகு தியை ஆக்கிரமித்துள்ளது.

இந்நிலையில் தங்களு டைய பூர்வீக வாழிடத்தில் மீள்குடியேற்றுமாறு இக் கிரா மக்கள் கோரிக்கைவிடுத்து ள்ளனர். (8-315)

# மாற்றுத்திறனாளிகளுக்கான காசோலைகள் வழங்கல்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபை யினரால் மாற்றுத்திறனாளி களிற்கான காசோலைகள் கொடுப்பனவு உதவித்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட புதுக்குடி யிருப்பு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 32 மாற்று திறனாளிகளுக்கான மாதம் 5000 ரூபா வீதம் ஆறு மாதங்க ளுக்கான கொடுப்பனவு காசோலை உதவிதிட்டம் நேற் றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தவகையில் புதுக்குடி யிருப்பு பிரதேச செயலாளர் பிரி விற்குட்பட்ட 19 பயனாளிகளுக்கு ஒருவருக்கு மூன்று மாதற்குரிய காசோலைகள் 15,000 ரூபா விகிதம் புதுக்குடியிருப்பு பிர தேசசபை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

ஏனைய மூன்று மாதங்க ளுக்கான 5000 ரூபா கொடுப் பனவு வழங்கி வைக்கப்பட இருக்கின்றது. ஏனைய 13 பயனாளிகளுக்கும் எதிர்வரும் நாட்களில் வழங்கப்பட இருக் கின்றது. (8-299)

# இரத்ததான முகாம்

(கொழும்பு)

அமரர் சின்னத்தம்பி கண பதிப்பிள்ளையின் 16 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இரத்ததான முகாம் நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 7.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள் ளது. (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 240 | 200-300 |
| உருளைக்கிழங்கு | 220 | 250 | 250 | 180 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 200 | 120 |
| தக்காளி | 100 | 150 | 150 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 200 | 230 |
| கோவா | 250 | 250 | 320 | 220 |
| கரட் | 300 | 350 | 350 | 260 |
| பூசணி | 60 | 100 | 50 | 50 |
| புடோல் | 150 | 200 | 200 | 100 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 160 | 150 |
| பாகற்காய் | 400 | 400 | 350 | 350 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 350 | 250 |
| பயற்றங்காய் | 250 | 300 | 350 | 350 |
| லீக்ஸ் | 300 | 250 | 200 | 180 |
| பீற்றூட் | 150 | 100 | 150 | 100 |
| கறிமிளகாய் | 300 | 450 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 280 |
| போஞ்சி | 500 | 500 | 600 | 350 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 40-120 | 100 | 80 |
| தேசிக்காய் | 800 | 400 | 1000 | 400-650 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150-200 | 120-200 |
| இராசவள்ளி | 800 | 650 | 900 | 400 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | 150 |
| முள்ளங்கி | 100 | 150 | 240 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 40 | 60 | 100 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 250 | 100 |

# இராசிபலன்

09.09.2025
ஆவணி 24 , செவ்வாய்க்கிழமை
துதியை முன்னிரவு 8.55 மணி வரை

உத்தரட்டாதி முன்னிரவு 9.12 மணிவரை
சுப நேரம் 10.34-12.04 மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம்
மகம்,பூரம்.

**வளவன்**

**மேஷம்** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், அடிப் படை வசதி வாய்ப்புக் களைப் பெருக்கிக் கொள்ள முற் படுவீர்கள், பணப்புழக்கம் அதி கரிக்கும் நாள்.

**மிதுனம்** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும், குடும் பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு.

**கடகம்** கோபத்தைக் குறை த்துக் கொள்வது நல் லது, மனதில் உற்சாக மும் மகிழ்ச்சியும் அதி கரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பயணங் களால் பலனுண்டு.

**சிம்மம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற் படலாம், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், நட்பொன்று பகையாகலாம்.

**கன்னி** குதூகலம் தரும் பயண மொன்று ஏற்படலாம், புதிய பொருட் சேர்க் கையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்ப வங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** சுபசெய்திகள் வந்து சேரும் நாள், வெளி யூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நல்ல வர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய் தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்** சுப காரியப் பேச்சுக் களில் முன்னேற்ற முண்டு, பிள்ளைகள் வழியில் பெருமைக் குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**தனுசு** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள் ளும், சுப காரியச் செல வுகளில் தாராளம் காட் டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பய ணங்கள் இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மெலோங்கும் நாள்.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பிரபலமான வர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொலை பேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பயணங்களால் பலனு ண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், எதிர்பார்ப்பு க்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மீனம்** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல் லாதிருப்பது நல்லது திட்டமிட்ட காரிய மொன்றில் திசை திருப் பங்கள் ஏற்படலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.


**தனித்து இயங்கக்கூடிய முறையில் யாரும் படைக்கப்படவில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன் பாகம் - 4

காவியத் தொடர் 861





அங்கேதான் தாங்கள் தேடும் பெண்மணி இருக்கிறாள். என்னுடன் சில ஆட்களை அனுப்பினால், அழைத்து வருகிறேன்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

பூங்குழலி திருமலையை எரித்து விடுகிறவள் போலப் பார்த்துவிட்டு, "அப்படி ஏதாவது செய்தால், நான் இப்போதே சக்கரவர்த்தியின் அரண்மனை முன்னால் சென்று முறையிடுவேன்! நீங்கள் செய்யும் அக்கிரமம் ஊரெல்லாம் அறியும்படி செய்வேன்!" என்றாள்.

"திருமலை! இவளைப் பாதாளச் சிறைக்கு அனுப்பி வைக்க வேண்டியதுதான் வேறு வழி இல்லை!" என்றார் அநிருத்தப்பிரம்மராயர்.

"என் அருகில் யாராவது வந்தால் கொன்று விடுவேன்!" என்று பூங்குழலி மடியில் செருகி வைத்திருந்த கத்தியை எடுத்துக் காட்டினாள்.

"ஐயா! இந்தப் பெண்ணை பாதாளச் சிறைக்கு அனுப்ப வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக இளையபிராட்டி குந்தவை தேவியின் மாளிகைக்கு அனுப்பி வைக்கலாம். இளையபிராட்டி இப்போது இங்கேதானே இருக்கிறார்? அவர் இந்தப் பெண்ணின் பைத்தியத்தைத் தெளிய வைப்பார்! இளைய பிராட்டிக்கும் இந்தப் பெண்ணினால் ஆக வேண்டிய காரியம் ஏதேனும் இருக்கலாம்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"எதனால் சொல்லுகிறாய்? இளையபிராட்டிக்கு இந்தப் பெண்ணின் மூலமாக என்ன காரியம் ஆகவேண்டியிருக்கப் போகிறது?"

"குருதேவரே! தங்களுக்குத் தெரியாதா? நேற்று மாலை இங்கு அடித்த புயல் சோழ நாட்டுக் கடற்கரை ஓரமாக அதாஹதம் செய்து விட்டிருக்கிறதாம்! தங்கள் அரண்மனை வாசலில் நாலாபுறமிருந்தும் தூதர்கள் வந்து காத்திருக்கிறார்கள்"

"ஆம், ஆம்! அவர்களையெல்லாம் நான் இப்போது பார்க்கவேண்டும். அதற்குள் இந்தப் பெண்ணிடம் பேச்சுக் கொடுத்ததில் வெகு நேரம் வீணாகிவிட்டது. இவள் ஊமையாகவே பிறந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்"

"கேள்வி முறையில்லாமல் கொடுமை செய்யலாம் அல்லவா?" என்று முணுமுணுத்தாள் பூங்குழலி.

"நாகைப்பட்டினத்துக்குப் பெரிய ஆபத்து என்று கேள்விப் படுகிறேன். கடல் பொங்கி வந்து நகரையே மூழ்க அடித்துவிட்டதாகச் சொல்கிறார்கள்!"

இந்த வார்த்தைகளைக் கேட்டு முதன் மந்திரி அநிருத்தர், பூங்குழலி இருவருமே திடுக்கிட்டார்கள்.

"அதைப் பற்றித் தங்களிடம் விசாரிப்பதற்கு இளைய பிராட்டியே இங்கே வந்தாலும் வரக்கூடும்" என்று முடித்தான் ஆழ்வார்க்கடியான்.

அவன் சொல்லி வாய் மூடுவதற்குள்ளே அரண்மனை வாசலில் ஜயகோஷத் தொனிகள் கேட்டன. "திருமலை, நீ எப்போது ஞான திருஷ்டி பெற்றாய்? இளையபிராட்டிதான் வருகிறார் போலிருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டு அநிருத்தர் எழுந்து வாசலை நோக்கி நடந்தார்.

அதற்குள் அதே வாசல் வழியாகக் குந்தவை தேவியும் வானதியும் உள்ளே பிரவேசித்தார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கல்விதான் நமக்குச் செல்வம்



மரகதபுரி என்னும் ஒரு நாடு இருந்தது. அந்த நாட்டை கோசலன் என்னும் மன்னன் ஆண்டு கொண்டு இருந்தான். அவன் அதிகமாக கல்வி அறிவு இல்லாதவன். ஆனால் அவன் தந்தை நல்ல கல்வி அறிவு பெற்றவராக இருந்ததால் இவனையும் கல்வி கற்க குருகுல வாசகத்துக்கு அனுப்பினார். என் தந்தை தான் மன்னர், அதற்கடுத்து நான் தான் மன்னராவேன், அப்புறம் எதற்கு படிக்கவேண்டும்? என்று குருவிடம் விதண்டாவாதம் செய்தான். குருவும் எத்தனையோ சொல்லிப்பார்த்தார்.

கல்வி என்பது மற்றவர்களை விட ஆளப் போகும் மன்னனுக்கு முக்கியம் என்று, இவன் கேட்காமல், குருவுக்கு தெரியாமல் அரண்மனைக்கு வந்துவிட்டான். அவன் தந்தையும் எத்தனையோ அறிவுரைகள் சொன்னார். கடைசி வரை இவன் கேட்கவேயில்லை.

இந்த வருத்தத்திலேயே மன்னர் நோய் வாய்ப்பட்டு சிறிது காலத்துக்குள் இறந்து விட்டார். வாரிசுப்படி கோசலன் அடுத்த மன்னனாக முடிசூடப் பட்டான். கல்வி இல்லாமலேயே நான் மன்னராகிவிட்டேன் என்ற கர்வம் அவனிடம் ஏற்பட்டது. தந்தையிடம் பணிபுரிந்து கொண்டிருந்த அனைத்து சான்றோர்களையும், வீட்டுக்கு அனுப்பி விட்டு அவனைப்போல கல்வியை கற்காமல் மந்திரிகளாகவும், நண்பர்களாகவும் இருப்பவர்களையே வைத்துக் கொண்டான். படித்தவர் களை இவனது வேலைக் காரர்களாகவும் வீரர்களாகவும் வைத்துக் கொண்டான். இதனால் தினமும் நடைபெறும் மந்திரி சபை வெறும் பாட்டும் கேலியுமாகவே நடந்து கொண்டிருந்தது. இது எதுவும் அறியாத புலவர் ஒருவர் மன்னனை காண அரண்மனை வாசலில், வாயில் காப்பவனாக நின்று கொண்டிருந்த வீரன் ஒருவனிடம் மன்னனைக் காண வந்துள்ளதாகத் தெரிவித்தார். வாயில் காப்பவனாக நின்று கொண்டிருந்தவன் ஓரளவு கற்றவன், அவன் ஐயா நீர் ஒரு புலவர், நன்கு கற்றவர், ஆனால் நீர் பார்க்கப்போகும் மன்னர் அதிகம் கல்வி கற்காதவர். அது போல் மந்திரி சபையில் உள்ளவர்கள் அனைவரும் கல்வி அறிவு அற்றவர்கள். அதனால் அங்கு உங்களுக்கு ஏதேனும் அவமானம் ஏற்படலாம். ஆதலால் தயவு செய்து இங்கிருந்து சென்று விடுங்கள் என்று சொன்னான். அதைக்கேட்ட புலவர் உன் அறிவுரைக்கு நன்றி. ஆனால் நான் மன்னனைக் கண்டிப்பாக காணவேண்டும் என வற்புறுத்தினார்.

வேறு வழியில்லாமல் வாயிற்காப்போன் புலவரை மன்னனை காண உள்ளே அனுப்பி வைத்தான். உள்ளே நுழைந்த புலவர் மன்னனை கண்டவுடன் மன்னரே வணக்கம் என் றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறு ஆவதில்லை. வரலாறு ஆனவர்கள் யாரும் தனக்காக வாழ்ந்ததில்லை. ~ காமராஜர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## செம்மணி மனிதப் புதைகுழி உண்மையைக் கண்டறிதல்

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு நடந்த கொடூரத்தை துலாம்பரப்படுத்தியுள்ளது.

ஏலவே கிருசாந்தி குமாரசாமி கொலைக் குற்றச்சாட்டின் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட சோமரட்ண ராஜபக்ஷ, நீதிமன்றில் அளித்த வாக்குமூலத்தில்; படையினரால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட தமிழர்களின் உடல்கள் செம்மணியில் புதைக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்திருந்தார்.

அவரின் வாக்குமூலத்துக்கு அமைய சோமரட்ண ராஜபக்ஷ செம்மணிக்கு அழைத்து வரப்பட்டு உடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களை அடையாளப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இருந்தும் அன்றைய சூழ்நிலையில் அவரால் குறித்த இடத்தை அடையாளப்படுத்த முடியவில்லை.

அவ்வாறு அடையாளப்படுத்த முடியாமைக்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம்.

ஆனாலும் யாழ்ப்பாணத்தில் படையினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட தமிழர்களின் உடலங்கள் செம்மணியில் புதைக்கப்பட்டன என்பதை சோமரட்ண ராஜபக்ஷ உறுதியாகக் கூறியிருந்தார்.

தவிர, அது தொடர்பில் அவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு மிகத் தெளிவான கடிதமொன்றையும் அண்மையில் அனுப்பியுள்ளார்.

அதில் தனக்காக வாதிடுவதற்கு குமார் பொன்னம்பலம் அவர்கள் முன்வந்திருந்தார் என்றும் ஆனால் அவர் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார் என்றும் அந்தக் கடிதத்தில் சோமரட்ண வெளிப்படுத்தியுள்ளார்.

இங்குதான் ஒரு விடயத்தை அனைவரும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

அதாவது, சோமரட்ண ராஜபக்ஷ இராணுவத்தில் கடமையாற்றிய ஒரு சிங்களவர்.

அதிலும் செம்மணிப் படை முகாமிலும் அதன் கட்டளை முகாமாக இருந்த அரியாலை முகாமிலும் அவர் கடமையாற்றியுள்ளார்.

ஆக, சோமரட்ண ராஜபக்ஷ ஒரு கண்கண்ட சாட்சி என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இதன் காரணமாகவே அவருக்காக குமார் பொன்னம்பலம் வாதிட முன்வந்தார் என்ற உண்மையும் இங்கு புலப்படுகிறது.

ஆக, செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மையைக் கண்டறிவதற்கான அத்தனை ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

தமிழ் மக்களைக் கடத்தி அவர்களைக் கொன்று புதைத்துவிடுவதன் மூலம் உண்மைகள் உறங்கி விடுமென படைத் தரப்பினர் கருதியிருக்கலாம்.

ஆனாலும் இயற்கை நீதி செம்மணி மனிதப் புதைகுழியை வெளிப்படுத்தியுள்ளது.

எனவே உண்மைகளைக் கண்டறிவதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் செய்வது தான் இயற்கை நீதிக்கு நாம் கொடுக்கின்ற மதிப்பும் மரியாதையுமாகும். இல்லையேல் இயற்கை நீதியின் தண்டனை எவ்வாறாக இருக்கும் என்பதை காலம் நிச்சயம் உணர்த்தும்.

# அரசியல் நோக்கங்களுக்காகவே நாட்டில் பாதாள உலகக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன பகிரங்கம்

(ஹற்றன்)

பாதாள உலகக் குழுக்கள் அரசியல் காரணங்களுக்காக தோற்றம் பெற்று அரசியலாலேயே வளர்க்கப்பட்டன என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

நாட்டில் மீண்டும் ஒரு பாதாள உலகம் உருவாகுவதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் இப்போது அந்த ஊழல் அரசியல் காலம் முடிந்து விட்டது.

பாதாள உலகக் குழுக்கள் தனித்தனியாகச் செயற்படவில்லை. பாதாள உலகம் அரசியலால் வளர்க்கப்பட்டது. பின்னர் நெருக்கடி வந்தபோது, அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடும் சூழ்நிலையாக மாறியுள்ளது. பாதாள உலகக் குழுக்கள் இலங்கைக்குள் மட்டுமல்ல, வெளியேயும் இயங்கி வருகின்றது.

இப்போது நாங்கள் அவற்றை ஒழித்து வருகின்றோம். ஒவ்வொன்றாக அதைச் சுத்தம் செய்வோம். எதிர்வரும் காலங்களில் நாட்டு மக்கள் இதைத் தெளிவாகக் காணமுடியும் என்று நினைக்கிறேன். இப்போது பாதாள உலகக் குழுக்களுக்கு மன்னிப்பு இல்லை. எனவே பாதாள உலகத்தை சுத்தம் செய்வது நிச்சயமாக முன்னெடுக்கப்படும்.

பாதாள உலகக் குழுக்கள் இலங்கைக்குள் மட்டுமே செயற்படும் ஒன்றல்ல என்பதை இப்போது அனைவராலும் புரிந்து கொள்ள முடியும். பாதாள உலகம் இன்று சர்வதேச மட்டத்தில் செயற்படுகின்றது. அந்த அளவிற்கு பாதாள உலகத்திற்கு ஆதரவளித்தவர்கள் யார்? என சகல விசாரணைகளையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம். விரைவில் உண்மைகள் வெளிப்படுத்தப்படும்.

76 ஆண்டுகளாக தவறான பாதையில் சென்ற ஒரு நாட்டை இரண்டு நாட்களில் சரியான பாதைக்குக் கொண்டு வருவது எளிதான காரியம் அல்ல. நாங்கள் நிச்சயமாக மாற்றுவோம். ஒரு மாற்றத்தை உருவாக்குவோம் என்றார். (ம-7)

### தரம் 5 புலமைப் பரிசில்

# பரீட்சை பெறுபேறு மீளாய்வுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை (2025) பெறுபேறுகள் தொடர்பான மீளாய்வு கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் இன்று முதல் ஆரம்பமாகும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய மீளாய்வுக் கோரிக்கைகள் இன்று முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இணையவழி முறைமை ஊடாக ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் பரீட்சார்த்திகள் தாம் கல்வி பயிலும் பாடசாலையின் அதிபர், பாடசாலைக்கு வழங்கப்பட்ட பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி https://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தளத்தில் SCHOOL LOGIN இல் உள்நுழைந்து மீளாய்வுக் கோரிக்கைகளை சமர்ப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழில் இருந்து கொழும்பு சென்ற பேருந்து விபத்து மூவர் காயம்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியாருக்குச் சொந்தமான அதிசொகுசு பஸ் ஒன்று நேற்று திங்கட்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் நீர்கொழும்பு கட்டுவ சந்தியில் வீதியை விட்டு விலகி மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் மூவர் காயமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சாரதியின் தூக்கக் கலக்கத்தினால் குறித்த அசம்பாவிதம் சம்பவித்திருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படும் நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## பருத்தித்துறை மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி குறித்துக் கலந்துரையாடல்

பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பாக இந்தியக் குழுவினருடனான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை பி.ப 03.30 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் துறைமுக அபிவிருத்தியின் அவசியம், தேவைப்பாடுகள் அதனால் ஏற்படும் சாதகங்கள், மீனவர்களுக்கான நன்மைகள், தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக விளக்கமளித்து, அபிவிருத்தி தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் யாழ்.இந்தியத் துணைத் தூதரக உதவித் தூதுவர் சங்கரன் இராஜகோபாலன், தூதரக அதிகாரிகளான என். ரவிசங்கர், எம்.பி. பெலியப்பா, திட்டமிடல் பணிப்பாளர், பருத்தித்துறை பிரதேச செயலாளர், கரையோரம் பேணல் மற்றும் மூலவள முகாமைத் திணைக்கள பொறியியலாளர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உத்தியோகத்தர்கள், மயிலிட்டி மீன்பிடித் துறைமுக முகாமையாளர் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். (ம-7,104)

## தேசபந்துவின் நியமனத்துக்கு எதிரான மனுக்களை விசாரிக்க உயர் நீதிமன்று தீர்மானம்

(கொழும்பு)


பதவி நீக்கம் செய்யப்பட்ட தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபராக நியமித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த முடிவு அரசியலமைப்புக்கு முரணானது என தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுக்கள் நேற்று (08) பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன, மஹிந்த சமயவர்தன மற்றும் அர்ஜுன ஒபே சேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் அமர்வு முன் அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபராக தேசபந்துவின் நியமனத்திற்கு எதிராக 09 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சிரேஷ்ட பேராசிரியர் கந்தையா குணரத்தினம் அவர்களின் 10 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும்



சிரேஷ்ட பேராசிரியர் அமரர் கந்தையா குணரத்தினம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொலைநோக்குப் பார்வை கொண்ட முன்னோடிக் கல்வியியலாளர்களில் ஒருவர். அவர், இன்றைக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் - 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி எம்மை விட்டுப் பிரிந்தார். அவருடைய மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவு என்று சொன்னால் மிகையாகாது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பொன்விழாவைக் கொண்டாடும் இந்த நேரத்தில் அவரது கல்விப் பாரம்பரியம் எமது பாதையை மிளிரச் செய்கிறது. இலங்கையில் உள்ள மூன்று முன்னணிப் பல்கலைக்கழகங்களில், நான்கு தசாப்தங்களுக்கும் மேலாகச் சிறப்பான சேவையாற்றிய பின்னர், ஓய்வு பெற்ற பேராசிரியர் குணரத்தினம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பதினைந்து ஆண்டுகள் உயர்கல்வியின் முன்னேற்றத்திற்கும், விஞ்ஞானக் கல்வி மேம்பாட்டிற்குமாகத் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

பேராசிரியர் குணரத்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் மற்றும் கணினி விஞ்ஞானம் ஆகிய துறைகளின் தாபகத் தலைவராகவும், விஞ்ஞான பீடாதிபதியாகவும், துணைவேந்தராகவும் கடமையாற்றித் தன்னுடைய ஓய்வு காலத்திலும் - இறுதி மூச்சு வரை விஞ்ஞான பீடத்தின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். தனது தொலைநோக்கு, நேர்மை மற்றும் சிறப்பான பணிகளினால் நிலைத்து நிற்கும் நிறுவனங்களை அவர் கட்டியெழுப்பியதுடன், பல தலைமுறையினரை ஊக்கப்படுத்தினார். சிரேஷ்ட பேராசிரியராக அவர் கடமையாற்றிய காலத்தில், பௌதிகவியல் கற்ற, பௌதிகவியற்றுறையில் பணியாற்றிய மாணவர்களில் நானும் ஒருவன் என்பது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம். பௌதிகவியல் மட்டுமன்றி, ஆய்வு மற்றும் நிர்வாகம் தொடர்பாகவும் அவரிடமிருந்து நான் நிறையக் கற்றுக்கொண்டதில் பெருமை கொள்கிறேன்.

1934ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி ஏழாலை கிராமத்தில் ஆறு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இளைய பிள்ளையாகப் பிறந்த அவர், தனது பாடசாலைக் கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பெற்றார். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வகுப்பில் முதலிடத்தைப் பெற்றதோடு, பல பாடங்களில் வகுப்புப் பரிசுகளையும், கணிதம் மற்றும் விஞ்ஞானத்தில் சிறந்த மாணவன், ஓவியத்திற்கான பரிசு போன்ற சில பாடசாலைப் பரிசுகளையும் வென்றுள்ளார்.

## மறைந்தார் மாண்பு

ஒரு சிறந்த இளங்கலை மாணவராக இருந்த இவர் 1958 இல் பௌதிகவியல் முதல் வகுப்பு சிறப்புத் தேர்ச்சியுடன் பட்டம் பெற்று, பௌதிகவியல் கலாநிதி ஹேவவித்தர்ன நினைவுப் பரிசை வென்றார்.

1963 இல், குணரத்தினம் லண்டன் பல்கலைக்கழகத்தில் PhD பட்டத்தையும் இம்பீரியல் கல்லூரியில் DIC பட்டத்தையும் பெற்றார். அவரது PhD ஆய்வுக் கட்டுரை, பூமியின் தட்டுப் புவிப்பொறை பற்றிய உலகளாவிய கோட்பாட்டின் முக்கிய தூண்களில் ஒன்றான, நேச்சர் சஞ்சிகையில் வெளிவந்த ஒரு புரட்சிகரமான ஆய்வுக் கட்டுரையின் ஆசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் ஃப்ரெட் வைன் உட்பட பல ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு தொடக்கப் புள்ளியாக இருந்ததால், அவரை உலகில் ஒரு தலைசிறந்த புவி விஞ்ஞானியாகப் பிரபலப்படுத்தியது.

காந்த ஒழுங்குகளின் விளக்கம் மற்றும் புவி காந்தப் புலத்தின் இடம் மற்றும் நேர வேறுபாடுகள் பற்றிய அவரது பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் சர்வதேச சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.

அவரது கட்டுரைகளில் ஒன்று இன்றும் சில நிறுவனங்களால் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இது புரூக்ஷா-குணரத்தினம் சிறப்பியல்பு வளைவுகள் (Bruckshaw-Kunaratnam characteristic curves) என அழைக்கப்படுகிறது.

தனது இளங்கலை சிறப்புப் பட்டத்தைப் பெற்ற உடனேயே, குணரத்தினம் 1958 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். 1964 இல் PhD பட்டம் பெற்றவராக இலங்கைக்குத் திரும்பிய கலாநிதி குணரத்தினம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனையில் ஐந்து ஆண்டுகள் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

பின்னர், அவர் 1969 இல் இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்புக்கு மாற்றப்பட்டார், அங்கு அவர் 1975 மார்ச் வரை பணியாற்றினார். 1975 ஏப்ரல் மாதத்தில், புதிதாக நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தில் முதல் பேராசிரியராகவும் பௌதிகவியல் துறையின் தலைவராகவும் கலாநிதி குணரத்தினம் நியமிக்கப்பட்டார். மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் துறையை ஒழுங்கமைத்து மேம்படுத்தும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் இந்த பல்கலைக்கழகத்தின் முன்னோடி கல்வியாளர்களில் ஒருவர். அவர் ஆர்வத்துடன் பணியாற்றி துறையை நன்கு ஒழுங்கமைத்தார். அவர் பல்கலைக்கழகம் முழுமைக்குமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு நன்கு பொருத்தப்பட்ட இயந்திரப் பட்டறையைத் துறையில் நிறுவினார்.

பேராசிரியர் குணரத்தினம் ஜனவரி 1977 முதல் மே 1978 வரையிலும், ஜனவரி 1984 முதல் நவம்பர் 1988 வரையிலும் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகப் பணியாற்றினார். அவரது வழிகாட்டுதலின் கீழ் பீடம் வேகமாக வளர்ந்தது. பேராசிரியர் குணரத்தினத்தின் நிர்வாகத் திறன், கல்வி மற்றும் ஆராய்ச்சியில் அவரது சாதனைகள், மற்றும் பேரவையின் பரிந்துரையின் அடிப்படையில், அப்போதைய ஜனாதிபதி, 1994 ஏப்ரல் மாதம் தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்கு அவரைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக நியமித்தார். பிராந்தியத்தில் இடம்பெற்ற அமைதியின்மை மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மையால் குறிக்கப்பட்ட பல்கலைக்கழக வரலாற்றின் ஒரு முக்கியமான காலகட்டத்தில் அவர் உபவேந்தராகப் பணியாற்றினார்.

அவர் பௌதிகவியலில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிய போது, 1958 இல் இலங்கையின் ஆகாய காந்த ஆய்வு மேற்கொண்ட கனேடிய புவி பௌதிகவியல் ஆய்வுக் குழுவுடன் தொடர்பு கொண்டார். அவர்களின் தரவுகளை விளக்குவதில் அவர் வெற்றிகரமாக இருந்தார். 1959 இல் ஒன்றும் 1960 இல் மற்றொன்றுமாக இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை இலங்கை அறிவியல் முன்னேற்ற சங்கத்தின் வருடாந்த அமர்வுகளில் கூட்டாகச் சமர்ப்பித்தார். அந்த ஆய்வுக் கட்டுரைகள் காந்தப்புல வேறுபாடுகளில் சூரிய, சந்திர மற்றும் பருவகால விளைவுகள் பற்றிய விடயங்களைக் கொண்டிருந்தன. இது இலங்கையில் ஆராய்ச்சிக்கு அவருக்குக் கிடைத்த முதல் வாய்ப்பாகும்.

1995 அக்டோபர் மாதத்தில், யாழ்ப்பாணத்தின் முழு மக்களும் பாரிய இடப்பெயர்வுக்கு உள்ளாகி, வன்னி, தென்மராட்சி மற்றும் வடமராட்சிக்கு அகதிகளாக கால்நடையாகச் சென்றபோது, சிரேஷ்ட பேராசிரியர் குணரத்தினம் உபவேந்தர் என்ற முறையில் பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக விரைவாகச் செயற்பட்டார். அவர் கடினமாக உழைத்து, பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குவதையும், பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் சரியான நேரத்தில் சம்பளம் வழங்கப்படுவதையும் உறுதி செய்தார். நிலைமை பதற்றமாகவும் கல்வி நடவடிக்கைகளுக்கு உகந்ததாகவும் இல்லை என்றாலும், சிரேஷ்ட பேராசிரியர் குணரத்தினம், இறுதி ஆண்டு மாணவர்கள் தங்கள் இறுதிப் பரீட்சைக்கு அமர இருந்த நேரத்தில் இடம்பெயர்ந்துள்ள துயரமான நிலையினைப் புரிந்துகொண்டு, இறுதி ஆண்டு மாணவர்கள் தங்கள் பட்டப் படிப்பை மேலும் தாமதமின்றி முடிக்க உதவுவதற்காக, கலை, விஞ்ஞானம் மற்றும் மருத்துவத் துறைகளின் இறுதிப் பரீட்சைகளை சாவகச்சேரி, கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் நடாத்த ஏற்பாடு செய்தார்.

ஒவ்வொரு வாழ்க்கையிலும் ஒருவரின் தைரியம், அர்ப்பணிப்பு மற்றும் உறுதியைச் சோதிக்கும் நிகழ்வுகள் உள்ளன. சிரேஷ்ட பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தனது பயணத்தின் வெற்றிகளையும் சோதனைகளையும் நிர்வகித்து, குறிப்பிடத்தக்க கண்ணியம், பலம் மற்றும் கருணையுடன் தனது சவாலை எதிர்கொண்டார். ஒரு கல்வித் தலைவராக அவரது நேர்மையையும், சிறப்புக்கான அவரது இடைவிடாத அர்ப்பணிப்பையும், நாம் அனைவரும் பின்பற்றுவதற்கான ஒரு நீடித்த தலைமைத்துவ முன்மாதிரியை அமைக்கிறது.



**புண்ணியமூர்த்தி ரவிராஜன்,**
**பீடாதிபதி, விஞ்ஞான பீடம் மற்றும் பௌதிகவியல் சிரேஷ்ட பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# ஐக்கிய மக்கள் சக்தி-ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து பணியாற்ற இணக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆரம்பக் கலந்துரையாடல்களின் போது எட்டப்பட்ட ஒருமித்த கருத்துக்கு இணங்க, ஐக்கிய தேசியக் கட்சி , ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பிற எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளுடன் தொடர்ந்து ஒத்துழைக்க முடிவு செய்துள்ளது.

அதன்படி ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பிற எதிர்க் கட்சிகளுடன் ஒருங்கிணைப்பை எளிதாக்குவதற்கு ஒரு குழு அல்லது இதேபோன்ற ஒரு பொறிமுறையை நிறுவுவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி முன்மொழிந்துள்ளது.



அண்மைய காலங்களில், பொதுவான நலன் சார்ந்த விடயங்களில் ஒத்துழைப்பதற்கான வழிகள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளது.

அந்தக் கலந்துரையாடல்களின் மூலம் எட்டப்பட்ட உடன்படிக்கைகளை தொடர்ந்து செயற்படுத்த கட்சி தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அதன்படி, ஐக்கிய தேசியக் கட்சி முன்னோக்கிச் செல்வதன் மூலம் வெளிப்படைத்தன்மையுடனும் ஆக்கபூர்வமாகவும் பணியாற்ற முடிவு செய்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (நி)

# எல்ல-இராவணா எல்ல இடையே ஆபத்தான 10 இடங்கள்

## பதுளை மாவட்ட வீதி அதிகார சபை

(கொழும்பு)

எல்ல - வெல்லவாய வீதியின் எல்ல மற்றும் இராவணா எல்ல இடையில் ஆபத்தான 10 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த இடங்கள் தொடர்பில் விசேட ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதாக பதுளை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் எஸ்.எஸ். ஹேன்னாயக்க தெரிவித்தார்.

அந்த வீதிகளின் இரு புறங்களையும் அவதானத்துடன் மீள கட்டமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்கீழ் 26 கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதி மீள்கட்டமைக்கப்படவுள்ளது.

பதுளை மாவட்டத்தில் விபத்துகளை தவிர்ப்பதற்காக 700 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (நி)



# ரணவீரவுக்கு மீண்டும் விளக்கமறியல்

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதவான் ஜனிதா பெரேரா நேற்று உத்தரவிட்டார்.

கிரிபத்கொடை நகரிலுள்ள அரச காணியொன்றை சட்டவிரோதமாக விற்பனை செய்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அடுத்த தவணையில் சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படும் போது, விசாரணை தொடர்பான முன்னேற்ற அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறந்தவர்களின்...

ரற்ற உடலங்கள், உயிரிழந்த குழந்தைகளின் சடலங்கள் மற்றும் மனிதக் கழிவுகள் புதைக்கப்பட்டிருப்பின் அதன் விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவு யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் கேட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவல்களை 1985ஆம் ஆண்டிலிருந்து அறிக்கையிடுமாறும் கேட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை மேற்படி குற்றப் புலனாய்வுப் பிரிவின் கோரிக்கைக்கு அமைய யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் வழங்கிய பதிலில் அரியாலை செம்மணி சித்துப்பாத்தி மயானப் பகுதியில் யாழ்.போதனா வைத்தியசாலையானது, சடலங்களையோ அன்றி மனித உடலங்களையோ எந்தக் காலத்திலும் புதைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது. (ந-7)

## கூரையிலிருந்து...

3ஆம் திகதி பிற்பகல் சகோதரன் வீட்டில் கூரையில் ஏறி சரி செய்த வேளை காலினை சலாகையில் வைத்தபோது அது முறிந்ததில் கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை (08) பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## யாழில் பலத்த...

முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அதேபோல உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மேலும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இதேவேளை திடீரென வீசிய புயல் காற்றினால் செல்வச்சந்நிதி ஆலயத் திருவிழாவிற்காக அமைக்கப்பட்டிருந்த தற்காலிகக் கடைகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. (ம-7,104)

## மாற்றத்துக்கான...

வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கையை நேற்று சமர்ப்பித்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்தி வந்த வன்முறை மற்றும் தண்டனையின்மை சுழற்சிகளிலிருந்து மீள்வதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை இலங்கை தற்போது பெற்றுள்ளது.

மாற்றத்தக்க சீர்திருத்தம், பொறுப்புக்கூறல், உண்மை மற்றும் நீதி ஆகியவற்றிற்காக நாடு முழுவதிலுமிருந்தும் அரசாங்கத்திற்குத் தெளிவான ஆணை கிடைத்துள்ளதாகவும் வோல்கர் குறிப்பிட்டார்.

மேலும் அண்மையில் தாம், இலங்கைக்கு விஜயம் செய்தபோது நாட்டின் மிக நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு புதிய திசை நோக்கிய பயணத்திற்கு, அந்த நாட்டின் தலைமை உறுதியளித்துள்ளதாகவும் வோல்கர் டேர்க் தெரிவித்தார்.

பொறுப்புக்கூறல், நீதியை வழங்குதல், நீண்டகாலமாக இலங்கை மக்கள் அனுபவித்துவரும் அரசியல் ரீதியான பாகுபாடுகள் மற்றும் பிரிவினையை நீக்குதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் வோல்கர் டேர்க் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஐஸ் போதைப்...

முத்துராஜவெல பகுதியில் இருந்து யாழிற்கு எரிபொருள் ஏற்றிவந்த எரிபொருள் தாங்கியினை சோதனையிட்டபோதே சாரதியிடம் இருந்து ஐஸ், கஞ்சா மற்றும் பயன்படுத்தும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது சாரதி கைது செய்யப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் சாரதி ஐஸ் மற்றும் கஞ்சா பயன்படுத்திய நிலையில் வாகனத்தைச் செலுத்தியமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,30,33)

## பயங்...

கள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் இலங்கை அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கையை நேற்று சமர்ப்பித்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாடு இருந்த போதிலும், இந்தச் சட்டத்தின் கீழ் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுப்புக் காவல்களுக்கு உடனடி தடை விதிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வோல்கர் டேர்க் வலியுறுத்தியுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் பொறுப்புக்கூறல் தொடர்பிலும் காணி விவகாரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பிலும் பணியாற்றுபவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

இதேவேளை வடக்கு மற்றும் கிழக்கின் இராணுவ மயமாக்கல், காணிகளை திருப்பியளித்தல் மற்றும் அனைத்து மட்ட ஆட்சிக்கும் அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விரிவான பாதுகாப்புத் துறை சீர்திருத்தத்திற்கான அவசரத் தேவை உள்ளதாகவும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.09.08
சீட்டிழுப்பு இலக்கம் 5946
C 4 5 2 8 2 0
அத சம்பத
C 2 8 2 0
சீட்டிழுப்பு இலக்கம் 0521

சுப தவசக்
திகதி 2025.09.08
மேடம் 29 44 45 52

தன நிதானய
திகதி - 2025.09.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1976
G 39 41 57 59 G

மெகா பவர்
திகதி 08/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2294
Q 19 10 25 57 66

ஜய ஜய
திகதி 2025.09.08
சீட்டிழுப்பு இலக்கம் 0214
D 7 0 0 0

கொவிசத
சீட்டிழுப்பு இலக்கம் 4188
சீட்டிழுப்பு திகதி 08.09.2025
P 22 28 52 76
P

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.08
சீட்டிழுப்பு இலக்கம் 1255
விருச்சிகம் 08 29 42 51 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
08.09.2025 வெற்றி வாரம் 0654
G 0 0 4 6 4 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,775,678.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2920
சீட்டிழுப்பு திகதி 2025.09.08 தினம் திங்கட்கிழமை
10 34 35 78 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,099,224.00

சனிதா
திகதி 08.09.2025 வெற்றி வாரம் 5081
15 26 28 61 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,818,059.20

ஜயோதா Jayeda
திகதி 2025.09.08 வெற்றி வாரம் 2159
13 16 57 68 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,511,554.80

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4632
சீட்டிழுப்பு திகதி 08.09.2025 தினம் திங்கட்கிழமை
17 28 36 59 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,822,749.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 37 22 43 50 56
2096
08.09.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.592,688,147.20

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2746
சீட்டிழுப்பு திகதி: 2025.09.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,463,833.60
28 56 62 69 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3835) 076 825 7716 (ஆகாஸ்)

## மணப்பெண் தேவை

01. தெல்லிப்பழை, இந்து, 1987, புனர்பூசம், BSc (Singapore), Civil Engineer, Vegitarian, Singapore Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32553)
02. தெல்லிப்பழை - அளவெட்டி, இந்து, 1995, திருவோணம், Masters in Civil Engineering (UK), Civil Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53654)
03. வடலியடைப்பு - மாவிட்டபுரம், இந்து, 1990, விசாகம், BSc in Computer Science and MBA மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30243)
04. மானிப்பாய், இந்து, 1975, அவிட்டம், Engineering Kelani University Building Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (50363)
05. திருகோணமலை, இந்து, 1989, திருவோணம், Graduate Finance Manager, Papua New Guinea மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53770)
06. கரவெட்டி, இந்து, 1981, அத்தம், Diploma in Business Studies, Hospital Officer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (29328)
07. துன்னாலை - கரவெட்டி, இந்து, 1989, உத்திரட்டாதி, Bio Medical and Electrical Engineering, Software Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (33630)
08. சங்கானை, இந்து, 1990, பூரம், Aeronautical Engineering, Airline Duty Manager, Italy Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54312)
09. கொக்குவில், இந்து, 1993, பூரம், Aeronautical Engineering, Masters Degree, Lead Fluid Dynamics Engineer, UK Citizen அழகான Handsom மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (33457)
10. சுழிபுரம், இந்து, 1993, பரணி, Quantity Surveyor, Dubai Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (38211)

நீங்களாகவே எமது Website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (5346)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## அபிவிருத்தி...

பட்டதாரி நியமனத்தில் உள்ளீர்க்கப்பட்டு பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தங்களை ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்று (08) முன்னெடுக்கப்பட்டது.

நாடு முழுவதிலுமுள்ள 18 ஆயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகளே இவ்வாறு மாவட்டம் தோறும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)



ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை தொடர்பான அறிக்கை சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்ட அமைப்பினால் நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் தலைவர் குமாரசாமி செல்வக்குமாரால் குறித்த அறிக்கையின் முதல் பிரதி நிமலராஜனின் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- இருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-3834)

V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
076 8226236

## காயத்திரி திருமண சேவை

சகல விதமான திருமண பொருத்தங்களும் பார்க்கப்படும்.
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.
உரும்பிராய் (5354)
077 844 9861, 076 314 4689

## உள்நாட்டுப்....


ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60வது கூட்டத் தொடரின் போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் இலங்கை குறித்த தமது அறிக்கையை முன்வைத்தார்.

அந்த அறிக்கைக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கை அரசாங்கம் சார்பில் பதில் வழங்கினார்.

இதன்போது உள்நாட்டுப் பொறிமுறையின் ஊடாக மாத்திரமே பொறுப்புக்கூறல் செயல்முறைக்கு இலங்கை உறுதிபூண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை தற்போதைய தேசிய மக்கள் சக்தி (NPP) தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, அனைத்து இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் செழிப்பை உறுதி செய்வதற்கு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதோடு, தொடர்ந்தும் எடுத்து வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், பொறுப்புக்கூறல் வழிமுறைகள் உட்பட நிர்வாகத்தின் வாக்குறுதிகளை நிறைவேற்ற இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் கால அவகாசம் வழங்க வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் வெளி விவகார அமைச்சர் கோரிக்கை முன்வைத்தார். (ம-7)





வீரமாகாளியை சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம்
யாழ்ப்பாணம் - நல்லையம்பதி

சிங்கார வேலன் சிவ காயத்திரி சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதானம்
மஹாளய பூஜை விஞ்ஞாபனம் 2025

நேசம் நிறை நெஞ்சத்தீர்!

யாழ்ப்பாணம் நல்லையம்பதியில் பல்லாண்டு காலமாக கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றை அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வீரமாகாளி அம்பாள் ஆலய ஈஷான பாகத்தில் அமைந்துள்ள சிங்காரவேலன் சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதானத்தில் 08.09.2025 ம் திகதி தொடக்கம் 21.09.2025 ம் திகதி வரை மஹாளய சிராத்த பூஜை நடைபெற வீரமாகாளித் தாயார் அருள்பாலித்துள்ளார். அத்தருணம் தாங்களும் ஆசார சீலர்களாகக் கலந்துகொண்டு தங்களின் குடும்பத்தில் இறந்த மூதாதையரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்து இன்புற்று வாழ்வீர்களாக!

தினமும்

| | |
|---|---|
| கும்ப பூஜை | - பகல் 09.00 மணி |
| விஷேட பூஜை | - பகல் 10.00 மணி |
| சிரார்த்த வழிபாடு | - பகல் 11.00 மணி |
| மஹேஸ்வர பூஜை | - நண்பகல் 12.00 மணி |

குறிப்பு :- 08.09.2025 ம் திகதி தொடக்கம் 21.09.2025 ம் திகதி வரை காலை 8.00 மணியில் இருந்து அடியார்கள் பிண்டம் இட்டு தர்ப்பணம் செய்து பித்ரு வழிபாடுகள் ஆற்றிக்கொள்ள முடியும். தினமும் நண்பகல் 12.00 மணிக்கு அன்னதானம் ஆரம்பமாகும். குறித்த தினங்களில் அன்னதானம் செய்ய விரும்புவோர் மற்றும் பிதிர்க் கடமைகள் செய்ய விரும்புவோர்கள் ஆலயத்தில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.

077 350 7275

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
தெளிவே என் சிந்தனை
(C-3833)

இங்ஙனம் : கௌரவ கலாநிதி இராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்
முதன்மை பிரதம குருவும், ஆதீனகர்த்தாவும்
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் - நல்லூர்

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல உயர்தர சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- தேநீர் தயாரிப்பவர் (ஆண்)
- சிற்றுண்டிகள் தயாரிப்பவர் (ஆண்/பெண்)

(5355)
070 664 7466, 077 469 6695

## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு | குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி | இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம் வயிற்றுப்புண் | Gastritis அல்சர் | மிகச்சிறந்த மூலிகை, Acu சிகிச்சைகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(5357)

## முகாமையாளர் தேவை

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பணியாற்றுவதற்குப் பொருத்தமான தகைமையுடைய முகாமையாளர் தேவை. 30 முதல் 70 வரையிலான வயதுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

நல்லை ஆதீன நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை
211/17, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(இளைப்பாறிய ஆசிரியர் விரும்பத்தக்கது)
(5352)

## வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனத்தில் யாழ்ப்பாணத்திற்கும், நெல்லியடிக்கும் வேலை வெற்றிடங்கள் உள்ளன. O/L சாதாரண தரத்தில் ஆறு பாடங்களிலும் உயர் தரத்தில் மூன்று சித்திகளும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

077 803 9320, 076 091 3868
(1531)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.